Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 02 - கதிர் -163 01.10.2001 திங்கட்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 6/-




# வன்னிப்பிராந்தியத்தில் புலிகள் அவசரகால நிலைப் பிரகடனம்

(நமது நிருபர்)

வன்னிப்பிராந்தியத்தில் விடுதலைப்புலிகள் அவசரகால நிலையைப்பிரகடனப் படுத்தியுள்ளதாககொழும்பிலிருந்துவெளிவரும் ஆங்கிலப்பத்திரிகையொன்று செய்தி வெளியிட் டுள்ளது.

தமிழீழவிடுதலைப் புலிகளின் மூத்ததளபதி கேணல் சங்கர்எனஅழைக்கப்படும் வைத்தியலிங்கம்-சொர்ணலிங்கம்கிளைமோர் தாக்குதலில் பலியானதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் தலைவர்பிரபாகரன்இந்த அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்தியுள்ளதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் பிரதித்தளபதியான பால்ராஜ்க்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டு ஆழஊடுருவும் சிறிலங்காப் படையணியைத்தேடும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப் பட்டுள்ளன. மணலாறுப்பகுதியில் விசேடதளபதியாக கடமையாற்றி வந்த பால்ராஜ் தற்போது தேடுதல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.எனவும் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேணல்சங்கரின்இழப்பு விடுதலைப்புலிகளிற்கு பேரிழப்பாகஅமைந்துள்ளது. புலிகளின் வெளிநாட்டு ஆயுதக் கொள்வனவுகளிற்கு பொறுப்பான கே.பி.குமரன் பத்மநாதனை

(8ம் பக்கம் பார்க்க)

## அம்பிளாந்துறையில் மேலும் இளைஞர் யுவதிகள் இணைவு

(நமது நிருபர்)

அம்பிளாந்துறைப் பகுதியில் இருந்து மேலும் முப்பது இளைஞர் யுவதிகள் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அம்பிளாந்துறை, கற்சேனை,சின்னமடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு இணைந்து கொண்டார். கற்சேனை, சிறிமுருகன் ஆலயத்தில் வைத்து நேற்றுப்

(8ம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் மர்மக் கொலைகள் பாதுகாப்பு வழங்கக் கோரிக்கை

(துஷி)

சாய்ந்தமருது கல்முனைப் பிரதேசங்களில் முகமூடி நபர்களினால் நடாத்தப்படும் மர்மக் கொலைகளைக் கட்டுப்படுத்தப் பள்ளிவாயல் நிர்வாகமும் பொலிசாரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 25ம் திகதி இரவு மாளிகைக்காடு ஆர்.கே.எம்.வீதியைச் சேர்ந்த இளம் தாயாரான சீனி முகமது சுபைதா (30) என்பவர் தூங்கிக் கொண்டிருந்த சமயம் வீட்டுக்குள் நுளைந்த முகமூடி நபர்கள் சுட்டுக் கொன்றதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதே போன்று சாய்ந்த மருதைச் சேர்ந்த வர்த்தகரான றபீக் வீட்டில் வைத்து முகமூடி நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மின் வெட்டு அமுலில் இருந்த சமயமே இரு கொலைச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன

இது தொடர்பாக சாய்ந்தமருது பொலிசாரிடம் உறவினர்கள் முறையிட்டுள்ளனர்

## சந்திரிகா,வாஜ்பாய் தொலைபேசியில் பேச்சு!

(கொழும்பு)

அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை அடுத்து இலங்கை - இந்தியப் பிராந்தியத்தில் எழுந்துள்ள நிலைமைகள் குறித்து இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் நேற்று தொலை பேசி மூலம் உரையாடினர் என்று இந்தியத் தகவல் ஒன்று தெரிவித்தது.

பிராந்திய மற்றும் சர்வதேச நிலைமைகள் குறித்துக் கருத்துப் பரிமாறிக் கொண்ட இரு தலைவர்களும் இத்தகைய விடயங்கள் தொடர்பாக பிராந்தியங்களின் தலைவர்கள் தமக்குள் தொடர்ந்து தொடர்புகளைப் பேணிவருவது அவசியம் என்று தமக்குள் ஒப்புக்கொண்டனர் என இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

## காங்கிரஸ் தலைவர் மாதவராவ் சிந்தியா உட்பட எட்டுப்பேர் விமானவிபத்தில் பலி

(கான்பூர், செப்.30)

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய மந்திரியுமான மாதவராவ் சிந்தியா விமான விபத்தில் அகால மரணமடைந்தார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவர் மாதவராவ் சிந்தியா. இவர் ராஜீவ்காந்தி, நரசிம்மராவ் தலைமையிலான அமைச்சரவைகளில் முக்கிய



உள்த்துறைஅமைச்சர் அத்வானியுடன் மறைந்த காங்கிரஸ் தலைவர் மாதவராவ் சிந்தியா

பங்கிரஸ் கட்சியின் இளம் தலைவராக விளங்கி வந்தார்.

உத்தரப்பிரதேசம் மாநிலம் கான்பூரில் நேற்று காங்கிரஸ் கட்சியின் மாநாடு ஒன்று நடைபெற்றது. இதில் கலந்து கொள்வதற்காக மாதவராவ் சிந்தியா உள்பட 8 பேர் ஒரு குட்டி விமானத்தில் நேற்று மதியம் 12.59 மணிக்கு டெல்லியிலிருந்து கான்பூர் புறப்பட்டுச் சென்றனர்.

பகல் 1.30 மணியளவில் விமானம்

(8ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பெண் கைது!

(வவுனியா நிருபர்)

வவுனியா ஆசிகுளம் பகுதியில் வசித்துவந்த பெண் ஒருவர் நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து வந்த விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார். ஆறு பிள்ளைகளின் தாயான இராசலிங்கம் பூபதி (வயது45) என்பவரே கைது செய்யப்பட்டவராவார். கடந்த வாரமும் கொழும்பில் இருந்து வந்த விசேட புலனாய்வுத் துறையினரால் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்க...

இதேவேளை ஆசி... பகுதியில் வசிக்கும் 6 பேரை எதிர்வரும் 10ஆம் திகதி கொழும்பு கோட்டையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அலுவலகம் அமைந்துள்ள நான்காம் மாடிக்கு விசாரணைகளுக்காக வருமாறு அவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

## கொழும்பில் நாற்பது இளைஞர்கள் கைது

(நமது நிருபர்)

கொழும்பு கறுவாத்தோட்டம், கொட்டாஞ்சேனை கொம்பனித்தெரு ஆகிய இடங்களில் படையினர் நடத்திய தேடுதலில் 40 தமிழ் இளைஞர்,யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கறுவாத்தோட்டத்தில்ஆறு பேரும் கொட்டாஞ்சேனையில் 19பேரும்கொம்பனித்தெருவில் 12பேரும்கைது செய்யப்பட்டனர்.இவர்களில்மூவர்பெண்களென கொட்டாஞ்சேனைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## கிளிநொச்சியில் எறிகணைகள் மீட்பு

(வவுனியா நிருபர்)

கிளிநொச்சியில் வெடிபொருள் அகற்றும் பிரிவினரால் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி வைத்தியசாலைக்குப் பின்புறமாகவுள்ள கிணற்றுக்குள்ளிருந்து ஜி.பி.எம்.தானியங்கித் துப்பாக்கியொன்று, 60மி.மீற்றர் எறிகணை-02, 81மி.மீற்றர் எறிகணை03, 120மி.மீ எறிகணை 04,கிளைமோர் குண்டு-01 என்பனவே மீட்கப்பட்டுள்ளன

(8ம் பக்கம் பார்க்க)

### எண்ணச் சிதறல்

நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதா? இல்லையா? விவாதம் ஆரம்பமானபின்னரே முடிவு.

-முஸ்லிம் காங்கிரஸ்



அப்ப காற்றடிக்கிற பக்கம் சாயிறதுதான் வழி.........

தமிழ் பேசும் மக்களின் குரலாக ஒலிக்கின்றது

# தினக்கதிர்

த.பெ. இல: 06
155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

தொ. பே. இல : 065 - 22554

E-mail :- tkathir@sltnet.lk


## ந(து)ம்பிக்கையில்லாத் தீர்மானம்

யானை ஒரு பலம்பொருந்திய மிருகம் அதனுடைய பலத்துக்கு முன்னால் சவால்விடுவதென்பது சாதாரணமான தொன்றல்ல.

யானையின் இந்த வெல்லமுடியாத பலத்துக்கு பிரதான காரணமாக அமைவது அதனுடைய தும்பிக்கையாகும்.

அனேகமான நான்குகால் மிருகங்களிலிருந்து அதனை வேறுபடுத்தி இனங்காட்டுவதும் இந்தத் தும்பிக்கையே

அதன் உணவு உட்கொள்ளும் செயற்பாடு, நீரருந்துதல் மற்றும் தன்னைத்தானே குளிப்பாட்டுதல் என இலகுவில் அசைக்கமுடியாத அதன் பெரிய உருவத்தின் அனைத்துச் தேவைகளும் இந்தத் தும்பிக்கையினாலேயே நிறைவேற்றப் படுகின்றன. வேறெந்த மிருகங்களுக்குமில்லாத ஒரு விஷேட அங்கமாக இது யானைக்கு வாய்த்திருக்கிறது.

இத்தகைய ஒரு பலம் பொருந்திய விலங்கினைத் தனது சின்னமாகக் கொண்டிருக்கிறது, இலங்கையின் பெரிய அரசியல் கட்சிகளில் ஒன்றான ஐக்கியதேசியக் கட்சி

இந்த நாட்டில் மாறி மாறி ஐ.தே.க வும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது அதன் கூட்டு முன்னணியும் ஆட்சிக்கு வந்தபோதும் 1977 முதல் 1994 வரை தொடர்ச்சியாக 17 ஆண்டுகள் இந்த நாட்டை ஆண்ட(?) ஒரு பலம்பொருந்திய கட்சி ஐ.தே.க

1994 ம் ஆண்டில், சந்திரிகா அலை வீசிய போது, ஏலவே தனது பலம் பொருந்திய தலைவர்களை இழந்து நொந்து போயிருந்த ஐ.தே.க தேர்தலில் தோல்வியைத் தழுவியது.

ஆனாலும் 1977 இல் அப்போது ஜனாதிபதியாக இருந்த ஐ.தே.க யைச் சேர்ந்த ஜே.ஆர் ஜெயவர்த்தனா தயாரித்த அரசியல் அமைப்பு, எல்லாவகையிலும் ஜே.ஆரை (ஜனாதிபதியை) மையமாகக் கொண்டே எழுதப்பட்டது.

17 வருடங்களாக ஐ.தே.க யை காப்பாற்றிவைத்திருந்த இந்த அரசியலமைப்பு என்னும் ஆயுதம், 94 தேர்தல் தோல்வியுடன் ஐ.தே.க யின் எதிரிகளின் கை ஆயுதமாகிவிட்டது. எல்லாவகையிலும் தமது கட்சியையும் முக்கியமாக அதன் ஜனாதிபதியையும் பாதுகாக்கவென ஐ.தே.க அன்று வடிவமைத்த அரசியலமைப்பு இன்று அவர்களது எதிரிகளைப் பாதுகாத்துவருகிறது.

77முதல் 94 வரை பலம்பொருந்திய ஐ.தே.க யானையைக் காப்பாற்றிவந்த அதன் தும்பிக்கையாக இந்த அரசியலமைப்பே இருந்துவந்தது.

இப்போது ஐ.தே.க யானை தும்பிக்கையை இழந்து நிற்கிறது. ஆட்சியை 'கதிரை' யிடம் இழந்து விட்ட யானை தற்போது வெறும்முண்டமாக நிற்கிறது.

அரசியலமைப்பின் பிரதான பலமான, நிறை வேற்று ஜனாதிபதி முறை என்பதை இல்லாதொழிக்கச் செய்து அதனைப் பலவீனமாக்கி 'கதிரை' யைக் கவிழ்க்க ஐ.தே.க எடுத்த முயற்சிகளும் தோல்விகண்டுவிட்டன.

இந்நிலையில் தற்போது 'கதிரை' யைக் கவிழ்க்க நம்பிக்கையில்லாத் தீமானத்தை அடிக்கடி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முயல்கிறது இந்தத் தும்பிக்கையில்லா யானை. தும்பிக்கையில்லா யானையின் இந்த முயற்சியும் தொடர்ந்து தோல்விகண்டுவருகிறது.

அதற்கு நம்பிக்கையூட்டிய ஜே.வி.பி கடைசி நேரத்தில் காலை வாரிவிட்டது. துணைநின்ற கட்சிகள் சிலவும், தற்போது பின்நிற்கின்றன.

இந்நிலையில், இப்போது மீண்டும் நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்ற முயலும் ஐ.தே.க அதில் அரசு தோல்விகண்டுவிட்டால், சிறிய கட்சிகளின் துணையுடன் ஆட்சியமைக்கப்போவதாகவும், அதற்கு சிறிதுகாலம் சந்திரிகாவே ஜனாதிபதியாக இருப்பார் எனவும் கூறிக் குழப்புகிறது.

தனது இந்தத் திட்டத்துக்கு உதாரணமாக கிரிக்கட் விளையாட்டை உதாரணம் சொல்கிறது அக்கட்சி.

மொத்தத்தில் ஆட்சியமைப்பதும், அமைத்ததைக் கவிழ்ப்பதும், கவிழ்த்ததை நிமிர்த்துவதும் என மக்களுடைய தலைகளில் சவாரிவிடுவது இந்தக் கட்சிகளுக்கு கிரிக்கட் விளையாடுவதுபோல ஒரு விளையாட்டாகிப் போய்விட்டது.

11 முட்டாள்கள் விளையாடும் விளையாட்டைப் பார்க்கும் 11 ஆயிரம் முட்டாள்கள் போல்,

தாம் தெரிவு செய்து அனுப்பிய 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் காட்டும் விளையாட்டை பார்த்துக் கொண்டிருக்கின்றனர் நமது மக்கள்.

# சேரிகளற்ற நகரங்கள் – ஒரு தூர நோக்கு

**ஐக்கியநாடுகள் சபை சர்வதேச ரீதியாக வீடுகளை அமைப்பதற்கும் அவற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கும் காலத்திற்கு காலம் பல நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. இதன் பொருட்டு வருடாந்தம் ஒக்டோபர் மாதம் வரும் முதல் திங்கட்கிழமையை சர்வதேச குடியிருப்போர் தினமாக பிரகடனப்படுத்தி வருடாந்தம் ஒவ்வொரு தொனிப்பொருளின் அடிப்படையில் சிறப்புற செயற்படுத்தி வருகின்றது. இவ்வருட தொனிப்பொருளாக "சேரிகளற்ற நகரங்கள்" என்பது ஐக்கிய நாடுகள் சபையின் தொனிப்பொருளாகும். இன்று கொண்டாடப்படும் சர்வதேச குடியிருப்போர் தினத்தை முன்னிட்டு இச்சிறப்புக்கட்டுரை பிரசுரமாகின்றது.**


குமாரவேல் தம்பையா
முதுநிலை விரிவுரையாளர்
பொருளியல் துறை
கிழக்குப்பல்கலைக்கழம்


உலகளாவிய ரீதியில் எல்லா மக்களுடைய நலனையும் கருத்திற் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை வீடுகளை அமைப்பதற்கான தீவிர முயற்சியில் கடந்த மூன்று தசாப்பதங்களாக ஈடுபட்டு வருகின்றது. வீடுகள் ஒரு மனிதனின் அடிப்படைத் தேவை மாத்திரமின்றி அது ஒரு தனிமனித உரிமையாகவும் இன்று மதிக்கப்பட்டு வருகின்றது. வீடில்லாமை, அல்லது முறைப்படி வீடுகள் அமைக்கப்படாமை ஒரு தீவிரமடைந்து வரும் பிரச்சினையாக இருப்பதுடன் இன்று வளர்ச்சியடைந்து வரும் நகராக்கத்தால் முறைப்படுத்தப்பட்டதும், ஒழுங்கமைக்கப்பட்ட வகையினதுமான வீடுகளை அமைக்க வேண்டியுள்ளது. ஒரு பொருளாதாரத்தின் சமூக அபிவிருத்திக்கு அடிப்படையான ஒரு கொள்கையாகவும் வீடமைப்பு இருந்து வருகின்றது. ஆயினும் நகராக்கம், நகர அபிவிருத்தி, நகரத் திட்டமிடல் போன்ற ஆழமான சிந்தனைகள், முன்னெடுப்புக்கள் பின்பற்றப்பட்டுவரும் இக்கால கட்டத்தில் நகரம் பற்றிய சிந்தனையுடன் உடனடியாகவே ''சேரிகள" (Slums) சேரி ஒழிப்புப்பற்றிய சிந்தனையும் மேலோங்கி வருகின்றது.

இன்றைய உலக குடியிருப்புக்களை நாம் பல்வேறு பகுதிகளாக பிரித்து நோக்கலாம். இத்தகைய பகுப்புக்களில் பிரதானமானது குடியிருப்புக்களினை பொருளாதார தொழிற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நோக்குவதாகும்.

உதாரணமாக நிலத்தை அடிப்படையாகக் கொண்ட குடியிருப்புக்கள் விவசாய அல்லது கிராமக் குடியிருப்புக்கள் எனவும், கைத்தொழில், சேவை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட குடியிருப்புக்கள் நகரக் குடியிருப்புக்கள் எனவும் பொருளாதாரத் தொழிற்பாட்டின் அடிப்படையில் பகுக்கப்படுகின்றன. இதே போன்றே மீன்பிடிக்குடியிருப்பு, பெருந்தோட்டக்குடியிருப்பு, சந்தைக் குடியிருப்பு என்பனவும் பகுக்கப்படுகின்றன. இத்தகைய குடியிருப்புக்களின் பண்புகளில் ஒன்று வாழ்விடங்களின் அடிப்படையில் அவற்றைப் பகுத்துப்பார்த்தலாகும். அவ்வாறு பிரித்துப் பார்க்கும் போதே சேரிகள் என்பவற்றை இனம் காண முடிகின்றது. இன்று சேரிகள் என்பவை நகரக் குடியிருப்பிலும் கிராமக் குடியிருப்பிலும் பொதுவான பிரச்சினைக்குரிய ஒன்றாக இருந்து வருகின்றன. ஆயினும் சேரிகள் நகரங்களில் தோன்றியதற்கான பின்னணியும், கிராமங்களில் தோன்றியதற்கான பின்னணியும் வேறுபட்டவையாகவுள்ளன.

சேரிகளை வரையறுக்கும் போது பெரும்பாலும் அவை அமைக்கப்பட்டுள்ள வீடுகளின் அடிப்படையிலேயே இனம் காட்டப்படுகின்றன. பெரும்பான்மை மக்களின் கண்களில் ''சேரிகள்" என்பது நகரில் மிக ஏழ்மை நிலையிலிருக்கும் மக்கள் கூட்டம் தாம் உறைவதற்காக மிக்க் குறைந்த உறைவிட வசதியாக தாம் அமைத்துக் கொண்ட தற்காலிக குடிசைகள் நிரம்பிய பிரதேசமாகவே தெரிகின்றது. குடிசை வீடுகள் என்பதற்கு மேலாக இவை சுகாதார வசதிகள் அற்றவையாக காற்றோட்டம் அற்ற நிலையில் குடிநீர் வசதிகள் குறைந்த நிலையில் கழிவகற்றல் இல்லாத குடிசை வீடுகளாக இவை உள்ளன. மொத்தமாக நோக்கும் போது அடிப்படை வசதிகளற்ற குடிசைகள், மிகுந்த சன நெருக்கம், சுகாதாரமற்ற வாழ்க்கைச் சூழல், தீயபண்புகள், சமூகச் சீரழிவுகள் நிறைந்த ஆரோக்கியம் சார்பானதும், வாழ்வியல் தொடர்பானதுமான பிரச்சினைகள் நிறைந்த இடமாக சேரிகள் பண்படையாளம் காட்டப்படுகின்றன. ஒரு வகையில் சேரிகள் சார்பாக இத்தகைய எதிரான சிந்தனையும் மனோநிலையும் ஏற்படக்காரணம் காலணித்துவத்தின் அத்துமீறல்களும், மேற்குலகச் செல்வாக்குமேயாகும்.

சேரிகள் பொதுவாக குறைவிருத்தி நாடுகளில் விருத்தியுற்ற நகரங்களில் பொதுவான பண்பாகவும் மிகப்பெரும் பிரச்சினையாகவும் உள்ளது. இதன் அர்த்தம் அபிவிருத்தியடைந்த நாடுகளில் சேரிகள் இல்லை என்பதல்ல. உதாரணமாக பிரித்தானியாவில் **கிலாஸ்கோ நகர் ஐரோப்பா வீன் சேரி** எனக் கூறப்படுகின்றது. ஆனால் மேலைத்தேச விருத்தியடைந்த நாடுகளைப் போன்று சேரிகள் வேறு ஒரு பார்வையில் பகுக்கப்படுகின்றது.

24 மணி நேரமும் தண்ணீர் வசதியில்லாத நிலையில், வெப்பமூட்டல் வசதியற்றதாக உள்ள எப்போதும் நிலம் ஈரலிப்பாக உள்ளதும் குளிர்சாதனப் பெட்டி வசதியற்றதுமான வீடுகளையும் அதில் வாழ்வோரையும் சேரிகள் என்றும் சேரிவாழ் நகர் மக்கள் என்றும் பகுக்கப்படுகின்றனர்.

சேரிகள் தோன்றியதற்கான காரணங்கள் வெவ்வேறு நாடுகளின் பார்வையில் வெவ்வேறுபட்டவையாக இருந்த போதிலும் சில பொதுவான காரணங்களாக பின்வருவனவற்றை அடையாளம் காணமுடியும்.

வறுமையான மக்கள் கூட்டம் ஒன்று நகர் நோக்கி இடம் பெயரும் போது இவ்வாறான சேரிகள் தோற்றம் பெற்றன என்பது விருத்தியடைந்து வரும் நாடுகளின் பார்வையில் உள்ளன. குறிப்பாக தமது வாழ்விடங்கள் அல்லது பாரம்பரிய வாழ்விடங்களில் வாழ்ந்து வந்தோரிடையே நிலமற்றவர்கள் சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள், அங்கு வாழ்வதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படாதவர்கள் இடம் பெயர்ந்து நகரங்களில் அன்றேல் புற நகர்ப் பகுதிகளின் அரசாங்க காணிகளிலும், கைவிடப்பட்ட கட்டிடங்களிலும் குடியேறும் போது சேரிகள் தோற்றம் பெற்றன.

திட்டமிட்ட அடிப்படையில்அமைக்கப்படாத கிராமங்களில் இருந்து நகரங்கள் நோக்கிய குடிப்பெயர்வும் அவர்கள் சட்டவி ரோதமாக நகரங்களின் பொது நிலங்களில் குடியேறியமையும் சேரிகள் தோன்றக் காரணமாய் இருந்தன. குறிப்பாக கிராமப் பொருளாதாரத்தில் தொழிற்சாலைகள் காணப்படாமை, தமது வாழ்க்கையை முழுமைப்படுத்த தேவையான தொழில் வசதிகள் இல்லாமை, அன்றேல் நில உடமையாளரின் வற்புறுத்தலால் கிராமங்களில் இருந்து வெளியேற்றப்பட்டோராய் இவர்களை அடையாளம் காண முடியும். சிறப்பாக இக் காலத்தின் மானிய முறைப் பொருளாதாரத்தின் நில அடைப்பு இயக்கம் அதன் தொடராக உருவாகிய கைத்தொழில் புரட்சி ஆகியன தாழ்த்தப்பட்ட மக்களை நகர் நோக்கி இடம் பெயர வைத்தது. சில சமயம் இவர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப் பட்டனர்.

''நகரம் என்பது சுபீட்சத்தின் வழி" என்ற சிந்தனை, எண்ணம் எல்லோர் மத்தியிலுமே இருந்து வருகின்றது. எம்மத்தியில் தொன்று தொட்டு வழங்கிவரும் ஒரு பழமொழி ''கெட்டாலும் பட்டணம் சேர்'' என்பதாகும். இந்த நகரக் கவர்ச்சி காரணமாக கிராமங்களில் இருந்து நகர் நோக்கி அதிகம் இடப் பெயர்வு ஏற்பட்டது. ஆனால் ''நகரம்" என்பது எல்லா வாய்ப்பு வசதிகளும் நிறைந்த ஒரு சொர்க்கமல்ல. இவ்வாறு இடம் பெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர் தொழில் கல்வி அனுபவம் இல்லாதோராயும், நகர சந்தைக்கு ஈடுகொடுக்க முடியாதோராயும், நகர வாழ்க்கையோடு வருமான ரீதியாக இணைய முடியாதோராயும் மாறினர்.

சில சமயம் அவர்களது தொழில் வாய்ப்புக்குரிய சந்தர்ப்பங்கள் தாமதமடைந்தன அல்லது பின்தள்ளப்பட்டன அல்லது மறுக்கப்பட்டன. இதனால் இவர்களில் பெரும்பாலானோர் நேரத்தின் அடிப்படையில் கீழுழைப்பிற்கு உள்ளாக்கப்பட்டனர். பெரும்பாலும் உடலுழைப்பை நம்பிய இவர்கள் தமது பொருளாதார நடவடிக்கைகளை நுகர்ச்சித் தன்மையோடு மட்டுப்படுத்தியிருந்தனர். இதனால் திறந்த சந்தையின் வாழ்விடங்கள் அல்லது ஒதுக்கப்பட்ட இடங்களில் ஓரங்கட்டப்பட்ட நிலையில் நகர்ப்புற சேரிக்குடிகளாக மாற்றமடைந்தனர்.

சேரிகள் பற்றிய பிரச்சினையை கண்டுகொள்வதற்கு முன் அவற்றின் உலகளாவிய போக்கையும் இலங்கையில் அதன் இன்றைய நிலையையும் நோக்குதல் பொருத்தமானது. போதுவாக இன்று உலகில் காணப்படும் எல்லா நகரங்களிலும் சிறப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நகரங்ளில் உள்ள மக்கள் தொகையில் 30 - 50% மான மக்கள் சேரிவாழ் மக்களாய் உள்ளனர். குறிப்பாக பெரு நகரங்கள் என உலகில் (Mega city) அடையாளப்படுத்தப்பட்டுள்ள நகரங்கள் இன்று உலகில் 25 ற்கு மேற்பட்டவை உண்டு. இவற்றில் 20க்கு மேற்பட்டவை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உண்டு. இந்நாடுகளின் மெகா நகரங்கில் 50% மானோர் சேரிவாழ் மக்களாக உள்ளனர். சிறப்பாக இன்றைய சேரிப்பிரச்சினை ஆசிய, ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகளில் உள்ள நகரங்களில் 40% மான மக்கள் சேரிகளில் வாழ்கின்றனர்.

(நாளை தொடரும்)

# உணவகங்களில் சுகாதாரம் பேணப்படுகிறது சுகாதாரப் பரிசோதகர்கள் சொல்கின்றனர்

(அலுவலக செய்தியாளர்)

''மட்டக்களப்பு நகரிலுள்ள உணவகங்களில் மற்றும் தேனீர்ச்சாலைகளில் சுகாதார ஒழுங்குகள் சீராகப் பேணப்படுகின்றன. அடிக்கடி நாம் அவற்றைப் பரிசோதித்து வருகிறோம்'' என மட்டக்களப்பு கோட்டைமுனை சுகாதாரப் பரிசோதகர்கள் தினக்கதிருக்குத் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நகரிலுள்ள உணவகங்களில் போதியளவுக்கு சுகாதார நடைமுறைகள் பேணப்படுவதில்லை எனவும் இதனால் பாவனையாளர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தினக்கதிரில் வெளியான செய்தி தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு கூறினர்.

''நாம் நகரிலுள்ள கடைகள் பலவற்றுக்கும் அடிக்கடி நேரில் சென்று சுகாதார நடைமுறைகள் சீராகப் பேணப்படுகின்றதா? என்பதைப் பரீட்சித்து வருகின்றோம். பல வியாபார நிலையங்களில் பாவனைக்குதவாத உணவுப் பொருள்கள் சிலவற்றைக் கைப்பற்றி நாம் அழித்தும் இருக்கிறோம்'' எனவும் தெரிவித்த அவர்கள் ''நாம் மட்டக்களப்பு கோட்டைமுனை சுகாதாரப் பரிசோதகர்களாகவே கடமையாற்றி வருகிறோம். எமது எல்லைக்குட்பட்ட பகுதியில் சுகாதார நடைமுறைகளை சீராகக் கண்காணித்து வருகிறோம்'' என்று தெரிவித்தனர்.

இது தொடர்பில் மீண்டும் சில உணவகங்களுக்கு நேரில் சென்று அவதானித்த போது அவர்கள் கூறுமளவுக்கு சுகாதார நடைமுறைகள் பேணப்படுவதாகத் தெரியவில்லை.

கோட்டமுனைப் பிரதேச எல்லைக்குட்பட்ட, திருமலை வீதியிலுள்ள சில உணவகங்களிலேயே சீரற்ற சுகாதார நிலைமைகள் இருப்பதை நேரில் அவதானிக்க முடிந்தது.

உணவுப் பொருள்களை சரியான முறையில் மூடிவைக்காமை, சாப்பாட்டுத் தட்டுக்கள் ஒழுங்காகக் கழுவப்படாமை, சமையலறைப் பகுதி துப்பரவு இன்றிக் காணப்படுகின்றமை போல பல குறைபாடுகளை சில உணவகங்களில் அவதானிக்க முடிந்தது.

உணவகமொன்றுக்கு வந்திருந்த நபர் ஒருவரிடம் இது தொடர்பில் பேச்சுக் கொடுத்த போது:-

''மட்டக்களப்பு நகரில் உணவு விடுதிகளில் திருப்தியான சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட உணவு கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஒருமுறை ஒரு உணவகத்தில் தேநீர் அருந்திய போது சீனிக்குப் பதிலாக 'அஜீனோ மோடோ'வை போட்டுத் தந்தனர்.

கேட்ட போது தவறுதலாக போட்டு விட்டதாகக் கூறினர். நல்ல வேளை, அஜீனோ மோட் டோ இருந்த இடத்தில் மலத்தீனோ அல்லது வேறு விஷமருந்துகளோ இருக்கவில்லை'' என்றார்.

''சுகாதாரப் பரிசோதகர்கள் அடிக்கடி பரிசோதிப்பதாகக் கூறுகின்றனரே?'' எனக் கேட்ட போது

''இந்தக் கேவலத்தைச் சுகாதாரம் என்கின்றனரா''? என அலுத்துக் கொண்டார் அவர்.

இதே வேளை, குறிப்பிட்ட ஒரு உணவகத்தின் மீது தாம் நடவடிக்கை எடுக்க முற்பட்ட போது அதிகாரத்தரப்பொன்றிடமிருந்து நடவடிக்கை எடுக்க வேண்டாம் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

## மூதூரில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்க ஏற்பாடு

மூதூரில் கடந்த வருடம் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட 24 பேரின் ஒரு வருட நினைவாக இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் ஹர்த்தாலின் போது மூதூர் கலாசார மண்டபத்துக்கு முன்பாக நினைவுக் கூட்டமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பலியான 24 பேரின் பெற்றோர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கொடிகாமத்தில் வீடு பார்க்கச் சென்ற வயோதிபர் மீது படையினர் தாக்குதல்

யாழ் தென்மராட்சியிலுள்ள கொடிகாமம் நகரப்பகுதியில் பொதுமக்கள் மீளக்குடியமர அனுமதிக்காத பகுதியிலுள்ள தனது வீட்டைப் பார்வையிடச் சென்ற சின்னத்தம்பி கந்தையா (53 வயது) என்பவர் (29.9.2001) சனிக்கிழமை அன்று அங்கு நின்ற இரு சிறிலங்கா படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். இவர் தற்போது மந்திகை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடுமையாகத் தாக்கப்பட்ட இவரது உடம்பில் கத்தியால் வெட்டப்பட்ட காயங்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. மயக்கமடைந்த நிலையில் வீழ்ந்து கிடந்த இவரை அங்கு சென்ற அயலவர்கள் மாலை 4.30 மணியளவில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். மாலை ஆறு மணிக்குப் பின்னரே இவர் மயக்கம் தெளிந்து சுயநிலைக்குத் திரும்பினார்.

இவர் படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக தெரிவிக்கையில்: ''நான் எனது வீட்டைப் பார்க்கச் சென்றபோது அங்கு ஒரு இளம் பெண் நிற்பதைக் கண்டேன். அப்பெண்ணை நான் எச்சரித்து வீட்டுக்குச் செல்லு மாறு கூறினேன். அப்பெண் படையினரிடம் கொடுத்த தகவலை அடுத்து அங்கு பதுங்கு குழி அமைத்துக் கொண்டிருந்த படையினரால் நான் கடுமையாகத் தாக்கப்பட்டேன். படையினர் கத்தியால் எனது உடலில் கீறிக் காயப்படுத்தினார்கள். அதன் பின்னர் நான் மயங்கி விழுந்துவிட்டேன். பின்னர் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது தற்போது நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதை அறிகின்றேன்'' என்றார்.

### வடமராட்சிக் கிழக்கு கண்டல் காடுகளில் படையினர் தேடுதல்

இதேவேளை யாழ் வடமராட்சிக் கிழக்குப் பகுதிக்கும் தென்மராட்சிப் பகுதிக்கும் இடைப்பட்ட கண்டல் காட்டுப் பகுதியில் சனிக்கிழமை காலை 7 மணியிலிருந்து நண்பகல் 12 மணி வரை சிறிலங்கா படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். வரணி, அம்பன், மணற்காட்டுப் பகுதியிலுள்ள கண்டல் காட்டுப் பகுதியிலும் மணற்காடு மற்றும் குடத்தனைப் பகுதியிலுள்ள சவுக்கங்காட்டு பகுதியிலுமே படையினர் இத்தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

விடுதலைப்புலிகள் இப்பகுதிகளில் ஊடுருவியுள்ளதாகப் படையினருக்குத் தகவல் கிடைத்ததையடுத்தே இத்தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட தாகப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மழைக்காலத்தில் இப்பகுதிக்குள் விடுதலைப்புலிகள் பதுங்கியிருந்து படையினர் மீது தாக்குதல் நடத்துவதற்கு சாத்தியமான புவியியல் தன்மை இப்பகுதியில் காணப்படுவதால், படையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் இத்தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

# வடக்கு கிழக்கில் 8 மாவட்ட அபிவிருத்திக்கு இளைஞர் விவகார அமைச்சு உதவி

(காரைதீவு நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள 8 மாவட்டங்கள் இளைஞர் விவகார அமைச்சின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இவ் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன.

நூலக அபிவிருத்தி தலைமைத்துவப் பயிற்சி, விளையாட்டு மைதானத்திருத்தம், விளையாட்டு உபகரணங்கள் வழங்கல், சிரமதானம் ஆகிய 05 பிரதான திட்டங்கள் மூலமாக இச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே.பரமேஸ்வரன் இத்தகவலை தெரிவித்தார்.

இம்முறை இளைஞர் விவகார அமைச்சிடமிருந்து வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு 5 மில்லியன் ரூபா கிடைத்திருப்பதாகவும் அதனைக் கொண்டு இளைஞர் முகாம் மற்றும் இவ் அபிவிருத்தித் திட்டத்தையும் செய்யவிருப்பதாக செயலாளர் கே.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இளைஞர் விவகார அமைச்சும், பணமும் ஒப்படைக்கப்பட்டதே தவிர, ஆளணி ஒருவரும் தரப்படவில்லை எனினும் ஆளுநரின் அங்கீகாரத்துடன் ஒருவரை அமர்த்தி பணியாற்றி வருகிறேன் என்றும் பரமேஸ்வரன் கூறினார்.

## இடைநிறுத்தப்பட்ட சமுர்த்தி முத்திரைகளை மீள வழங்குமாறு – ஜனாதிபதிக்கு கடிதம்

(வேதாந்தி)

மட்டக்களப்பு ஓட்டமாவடிப் பிரதேச செயலாளர் பிரிவில் பல குடும்பங்களுக்கு இடை நிறுத்தப்பட்ட சமுர்த்தி முத்திரை களை மீள வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி பிறைந்துறைச் சேனை நூரியா ஜும் ஆப் பள்ளிவாயல், வாழைச்சேனை முகைதீன் ஜும்ஆ மஸ்ஜித் நம்பிக்கையாளர் சபை என்பன ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அரசு 20 வீதமான சமுர்த்தி முத்திரைகளை மீளப் பெறுமாறு அறிவித்தமைக்கமைய குறிப்பிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமக்கு பிடிக்காத சிலரிடமே முத்திரைகளை மீளப் பெற்றனர். சில வசதி படைத்தவர்களிடம் முத்திரைகள் மீள்பெறப்படவில்லை. இது சம்பந்தமாக சமுர்த்தி முகாமையாளர், மாவட்ட சமுர்த்தி ஆணையாளருக்கு அறிவித்து முத்திரைகளை மீள வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் இன்னும் வழங்கப்படவில்லையென அக்கடிதங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## துப்பாக்கிச் சூட்டுக்கு படையினர் பலி

(வேதாந்தி)

மட்டக்களப்பு கிரான் எனுமிடத்தில் பஸ் வண்டியொன்றினை இடைமறித்து அதில் சிவில் உடையில் பயணம் செய்த இராணுவ வீரர் ஒருவரை புலிகள் சுட்டுக்கொன்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் நடை பெற்றது. அவசர வேலையொன்றின் காரணமாக சித்தாண்டி இராணுவ முகா மில் பணிபுரியும் இவர் வீடு நோக்கிச் சென்ற போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐ.தே.க கரையோர மாவட்ட செயற்குழு நியமனம்

(ஐ.எல்.ஜலீல்)

அம்பாறை கரையோர மாவட்டத்தினுடைய ஐ.தே..க இணைப்பாளர் எம்.ஐ. பௌஸ்தீன் தலைமையிலான செயற்குழுவும் ஐ.தே.க தல்லைமைக்காரியாலயத்தினால் நியமிக்கப்பட்டுள்ளது.

கரையோர மாவட்ட அங்கத்தவர்கள் சேகரிப்புக்கான இணைப்பு செயலாளராக நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் பீ.உமர்கத்தா (ஜே.பி) வும் தொடர்பு சாதனங்களுக்கான அமைப்புச் செயலாளராக காரை தீவைச் சேர்ந்த எஸ்.லோகநாதனும் சட்டத்துறைக்கான இணை' லாளராக மருதமுனை யைச் சேர்ந்த சட்டத்தரணி ஏ.எம். றகீப்பும், பிரசார இணைப்புச் செயலாளராக பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் எம்.எம். ஹசன் அவர்களும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்காவினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜே.வி.பியின் நிபந்தனைக்கு அமைய *60 கோடி ரூபா விவசாயக் கடன் ரத்து*

அரச வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சுமார் அறுபது கோடி ரூபா வரையான கடன் தொகையை அறவிடுவதை உடனடியாக ரத்துச் செய்யும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வெள்ளியன்று உத்தரவு பிறப்பித்தார்.

இதன்படி 1999ஆம் ஆண்டு முதல் 2001 சிறுபோகம் வரையான காலப்பகுதியில் விவசாயிகள் பெற்றிருந்த 20 ஆயிரம் ரூபாவுக்குட்பட்ட கடன்தொகையை அறவிடும் பணிகளை உடனடியாக நிறுத்துமாறும் இது தொடர்பாக கடன் பெற்ற விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் அறிவிக்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நிதி, திட்டமிடல் அமைச்சு அதிகாரிகள், அரச வங்கி அதிகாரிகள் ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, மாகாண அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

பொ.ஜ.முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப் பந்தத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் இந்த விவசாயக் கடன்கள் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் அடங்கியுள்ளது தெரிந்ததே.

# வீதி நிர்மாணப் பணிக்கு திருமதி அஷ்ரப் அங்கீகாரம்

(களுவாஞ்சிகுடி நிருபர்)

களுவாஞ்சிகுடி 'சூரையடி' கிராமத்தில் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வீதி நிர்மாணப் பணியை முற்றாக அமைப்பதற்கு அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ர.்ப் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

மனிதவலு அமைப்பின் தலைவர் வடிவேல் கண்ணனின் அயராத முயற்சியின் பயனாக முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் சிபார்சையடுத்தே அமைச்சர் பேரியல் அஷ்ர.்ப் இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்.

## ஆரையம்பதி குடும்பஸ்தர் கத்திக் குத்துக்கு பலி

(வேதாந்தி)

மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் அக்கரைப்பற்றில் வைத்து கத்திக் குத்துக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் சனி மாலை மரணமாகியுள்ளார்.

மரணமானவர் மேசன் வேலை செய்யும், காசுபதி பொன்னுத்துரை (40) இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்படுகிறது. மேசன் வேலைக்குச் சென்ற போது இவருடைய சகோதரரே இவரைக் கத்தியால் குத்தி இருக்கலாம் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# அமெரிக்க அதிரடிப்படை ஆப்கானில்? புஷ்ஷின் பேச்சில் பூடகத்தன்மை

(இஸ்லாமாபாத்)

ஒசாமாவைத் தேடிப் பிடிக்க அமெரிக்காவின் சிறப்பு அதிரடிப்படையினர் ஆப்கானில் புகுந்துள்ளனர். இவர்கள் காட்டும் பகுதியில் ஏவுகணை தாக்குதல் நடத்தவும் அமெரிக்க கடற்படை மற்றும் வான் படையினர் உஷார் நிலையில் உள்ளனர். இந்த அதிரடியால் தலிபான் தலைவர் முல்லா உமரின் சுருதி குறையத் துவங்கியுள்ளது. பேச்சு நடத்த தயார் எனத் தெரிவித்துள்ளார். இருதலைக்கொள்ளி எறும்பாக உள்ள பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும் சமரசப் பேச்சுக்கள் தொடர்வதால் தாக்குதலை நிறுத்தி வைக்கும்படி அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் என பிரபல வெளிநாட்டுச் செய்தி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

நியூயார்க் மற்றும் வாஷிங்டன் நகரங்கள் மீது நடந்த தாக்குதலுக்கு காரணமான ஒசாமா பின்லேடனை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என அமெரிக்கா கூறிவருகிறது. இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தவும் தயாராகி வருகிறது. இதற்கிடையில், ஒசாமாவை அமெரிக்காவிடம் ஒப்படைத்து விடுமாறு தெரிவிக்கவும், இது குறித்து தலிபான் தலைவர்களுடன் பேச்சு நடத்தவும் பாகிஸ்தான் மதத்தலைவர்கள் அடங்கிய தூதுக்குழுவினர் இரண்டாவது முறையாக காந்தகார் சென்றனர். தலிபான் தலைவர்களுடன் அவர்கள் கடைசிக் கட்டமாக நடத்திய பேச்சு வார்த்தையும் தோல்வியில் முடிவடைந்து விட்டது.

தேடுதல் வேட்டை: இதற்கிடையில், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ராணுவத்தினர் போருக்கு முன்னதாகவே ஆப்கனுக்குள் புகுந்து ஒசாமாவை தேடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஆப்கனுக்குள் இறங்கியுள்ள அமெரிக்க மற்றும் இங்கிலாந்து படைகள் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு ஏற்றவாறு அமெரிக்க கடற்படையும், விமானப்படையும் ஆப்கனைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்திலும் நிறுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் சிறப்பு அதிரடிப்படையினர் ஆப்கனுக்குள் புகுந்துள்ளதை அந்நாட்டின் ராணுவ தலைமை அலுவலகமான பென்டகன் அதிகாரிகளும் மறுக்கவில்லை. இந்த விஷயம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கமறுத்துவிட்டனர். ஆனால், அமெரிக்க படைகளின் ரகசிய நடவடிக்கைகள் துவங்கி விட்டதை அதிபர் ஜோர்ஜ்புஷ் பூடகமாகத் தெரிவித்துள்ளார்.

'நாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை சில நேரங்களில் மக்கள் தொலைக்காட்சி மூலம் பார்க்கலாம். ஆனால், எல்லா நேரங்களிலும் நாங்கள் என்ன செய்கிறோம் என்பதை பார்க்க முடியாது. இதை நான் உரக்கவும், தெளிவாகவும் சொல்கிறேன். ஆனால், எந்த தவறும் செய்யமாட்டோம். எதிரிகளை விரட்டி விரட்டித் தாக்குவோம்,' என அதிபர் புஷ் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் சிறப்பு அதிரடிப்படையினர் ஆப்கனுக்குள் புகுந்திருப்பது உறுதியாகியுள்ள நிலையில், எத்தனை படைப்பிரிவினர் புகுந்துள்ளனர். அவர்கள் தற்போது எங்குள்ளனர் என்பது பற்றிய தகவல் வெளிவரவில்லை. கடற்படையினரும், விமானப்படையினரும் ஆப்கனைச் சுற்றி முகாமிட்டுள்ளதால், தரைப்படையைச் சேர்ந்தவர்களே ஆப்கனுக்குள் புகுந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

ஆப்கானுக்குள் புகுந்துள்ள அமெரிக்காவின் அதிரடிப்படையினர் தீவிரவாதிகளின் முகாம்கள்மீது அதிரடி சோதனை நடத்துவதோடு, மறைந்திருக்கும் சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடன் உட்பட பலரை பிடிப்பர் என கூறப்படுகிறது.

மேலும் ஆப்கானுக்குள் புகுந்துள்ள இந்த அமெரிக்கப் படையினர் அங்கு தீவிரவாதிகள் மற்றும் ஒசாமாவின் ஆதரவாளர்கள் தங்கியிருக்கும் முகாம்களை லேசர் கதிர்வீச்சுக்களால் கோடிட்டு காட்டியவுடன், ஆப்கானைச் சுற்றியுள்ள கடற்படைக் கப் பல்களிலிருந்து 'டோமாஹாக்' ஏவுகணை அல்லது வேறு வகையான ஏவுகணைகள் வீசி அந்த முகாம்கள் அழிக்கப்பட உள்ளன. இதற்கு ஏற்ற வகையில், 18பவுண்ட் மல்டி பாண்ட் மற்றும் மல்டி மிஷன் ரேடியோ, இரண்டு பவுண்ட் எடை கொண்ட மல்டி பாண்ட் பீகான் போன்ற தகவல் தொடர்பு சாதனங்களுடன் அமெரிக்க அதிரடிப்படையினர் புகுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர ஆயுதங்களுடன் வரும் ராணுவ வாகனங்களையும், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள விமானங்களையும், வெடிமருந்துக் கிடங்குகளையும், விமானங்கள் எரிபொருள் நிரப்பும் வசதிகளையும் தாக்கி அழிக்கும் இலகுரக துப்பாக்கிகளையும் அமெரிக்கப் படையினர் கொண்டு சென்றுள்ளனர். இந்தப் படையினர் இரவு நேரங்களில் தாக்குதல் நடத்துவதிலும், அதிரடி சோதனைகள் நடத்துவதிலும், சதி வேலைகளிலும் பயிற்சிபெற்றவர்கள் என அமெரிக்க ராணுவத்தின் முன்னாள் அதிகாரி மிக்கேல் விக்கர்ஸ் கூறியுள்ளார்.

**தற்போது ஆப்கானில் புகுந்துள்ள இந்தப் படையினர் அமைதியாக இருந்து நிலைமையை கண்காணித்துக் கொண்டிருப்பர். தகவல்களை சேகரிப்பர், பிரிவினைவாத சக்திகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வர், பின்னர் அதிரடி தாக்குதலுக்குத் தயாராகி விடுவர்.**

'தற்போது ஆப்கானில் புகுந் துள்ள இந்தப் படையினர் அமைதி யாக இருந்து நிலைமையை கண்காணித்துக் கொண்டிருப்பர், தகவல்களை சேகரிப்பர், பிரிவினைவாத சக்திகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வர், பின்னர் அதிரடி தாக்குதலுக்கு தயாராகி விடுவர், என அவர்களின் சிறப்பான செயல்பாடுகள் பற்றி அமெரிக்க ராணுவத்தில் பணிபுரிந்த முன்னாள் அதிகாரிகள் பலரும் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா மேற்கொண்டுள்ள இந்த அதிரடி நடவடிக்கையால் தலிபான்களின் தலைவர் முல்லா முகமது உமரின் சுருதி குறையத் துவங்கியுள்ளது. அமெரிக்கா இணக்கமான வகையில் நடந்து கொண்டால், இஸ்லாமியத்திற்கு எதிரான கொள்கைகளை கைவிட்டால், அவர்களுடன் பேச்சுநடத்த தாங்கள் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 'ஒசாமாவை விரைவாக ஒப்படைக்க வேண்டும், அத்துடன் அமெரிக்கா விதித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். அதுவரை எந்த சமர்ச பேச்சிற்கும் இடமில்லை, என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கடுமையாக கூறியுள்ள நிலையில், முல்லா உமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


**முஷாரப் கெஞ்சல்**

முல்லா உமரின் இந்த செய்தியை நேற்று முன்தினம் பாகிஸ்தானிலிருந்து காந்தகார் சென்ற மத தலைவர்கள் குழுவில் இடம் பெற்றிருந்த மவுலானா முகமது ஜமீல் பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார். இருந்தாலும், தலிபான்களின் விருந்தாளியான ஒசாமாவை ஒப்படைக்க உமர் மறுத்து விட்டதாகவும் ஜமீல் தெரிவித்தார்.

இதற்கிடையில், எப்படியாவது தலிபான்களுக்கும், அமெரிக்காவிற்கும் இடையே சமரசம் ஏற்படுத்தி போரைத் தவிர்க்க வேண்டும் என தீவிரமாக முயன்று வரும், இருதலைக்கொள்ளி எறும்பாக செயல்பட்டு வரும் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப், சமரசப் பேச்சுக்கள் தொடர்வதால், ஆப்கன் மீது தாக்குதல் தொடுப்பதை நிறுத்தி வைக்க வேண்டும், என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

❋❋❋❋

## உலக வலம்




அதிவேகமாகச் சென்று தாக்கக்கூடிய அமெரிக்க போர்க் கப்பல்கள் அதிவிரைவாக விரைந்து செல்லும் காட்சி

## டெல்லியில் அமெரிக்க விமானம் இறங்கியது ஏன்? வாஜ்பாய் விளக்கம்

(புதுடெல்லி,)

டெல்லிவந்த விமானத்தில் அமெரிக்க அதிரடிப்படை வந்ததா என்று சர்ச்சை கிளம்பி உள்ளது. இதற்கு அமெரிக்க மற்றும் இந்திய அரசுகள் விளக்கம் அளித்து உள்ளன.



அமெரிக்க விமானம் ஒன்று டெல்லி பாலம் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் இறங்கி எரிபொருள் நிரப்பிவிட்டு சென்றது அல்லவா? இது சர்ச்சையை கிளப்பி இருக்கிறது. அமெரிக்காவுக்கு இந்தியா ராணுவ உதவி வழங்கியதா என்ற கேள்வி எழுந்தது. இது தொடர்பாக டெல்லியில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

டெல்லி வந்த அமெரிக்க ராணுவ போக்கு வரத்து விமானத்தில் எந்த வித ராணுவ தளபாடஙகளோ, ஆப்கானை தாக்குவதற்காக அதிரடிப்படையோ வரவில்லை. 28ந் தேதி மதியம் 1.30 மணிக்கு வந்த அந்த விமானம் எரிபொருள் நிரப்பிவிட்டு சிஙகப்பூர் சென்று விட்டது. அதில் 6 அமெரிக்க அதிகாரிகள் இந்தியா வந்தனர். பாதுகாப்பு காரணமாகவே அந்த 6 பேரும் வழக்கமான விமானத்துக்கு பதிலாக விமானப்படை விமானத்தில் வந்தனர். சிஙகப்பூரில் இருந்துவந்த அந்த விமானம் 6 அதிகாரிகளை இறக்கிவிட்டு மீண்டும் சிஙகப்பூருக்கே சென்று விட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

இது தொடர்பாக பிரதமர் வாஜ்பாயிடம் காஙகிரஸ் மூத்த தலைவர் நட்வர்சிங தொடர்புகொண்டு விளக்கம் கேட்டார். அமெரிக்க தூதரகத்தைச்சேர்ந்த 6 அதிகாரிகளை இறக்குவதற்காகவே அந்தவிமானம் டெல்லி வந்தது. அவர்களை இறக்கிவிட்டு எரிபொருளும் நிரப்பிவிட்டு மீண்டும் அந்த விமானம் சிஙகப்பூர் சென்று விட்டது என்று பிரதமர் வாஜ்பாய் விளக்கம் அளித்தார். அமெரிக்காவுக்கு எந்தவித ராணுவ உதவியும் அளிக்கப்பட மாட்டாது. அவர்களும் கேட்கவில்லை என்று பிரதமர் தெளிவுபடுத்தினார். இந்த தகவலை நட்வர்சிங நிருபர்களிடம் கூறினார்.

### அமெரிக்கத் தூதரகத்துக்கு நவீன கருவிகள்

டெல்லியில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு நவீன தொழில் நுட்பம் வாய்ந்த பாதுகாப்பு கருவிகளை அந்த விமானத்தில் கொண்டு வந்ததாக உயர் வட்டாரஙகள் கூறின. அந்த கருவிகளையும் அதிகாரிகளையும் இறக்கி விட்டு விமானம் சென்று விட்டதாகவும் அந்த தகவல் மேலும் தெரிவிக்கிறது.

அமெரிக்காவில் நடந்த தாக்குதலுக்கு பிறகு ஆசியநாடுகளிலுள்ள அமெரிக்க தூதரகஙகளுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் அடுத்த 48 மணி நேரத்துக்கு இந்தியாவில் எந்த ஒரு பகுதியிலும் அமெரிக்க விமானஙகள் இறஙக அனுமதி கோரவில்லை என்றும் அந்த வட்டாரஙகள் கூறின.



வழமையான பயிற்சிகளை முடித்துக்கொண்டு திரும்பும் அமெரிக்க வான்படை போர் விமானம்

# பல வருடங்களாக கவனிப்பாரற்றுக் கிடக்கும் கிராம அபிவிருத்திப் பணிகள்

## சிறு சிறு அரசியல் பிணக்குகளே காரணம்

(எம்.எம்.பைசால்)

எமது பிரதேசத்தில் சில கிராமங்களில் பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கட்டிட வேலைகள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. அவைகள் அரசியல் காரணங்களாலேயே அப்படிக் கிடக்கின்றன என்பதை அறியும் போது மன வேதனையாக உள்ளது. அப்படிப்பட்டதொரு நிலை இங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த நூலகக் கட்டிடத்திற்கு வந்துவிடக்கூடாது. அதற்கேற்ற மாதிரி நாங்கள் எங்களுக்குள் இருக்கின்ற சிறு சிறு அரசியல் பிரச்சினைகளைத் தள்ளி வைத்துவிட்டு எமது கிராமத்தின் அபிவிருத்திகளுக்கே முன்னுரிமை யளிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு கடந்த 28.09.2001 ஆம் திகதி மருதமுனை பொது நூலகத்தின் மூன்று மாடிக் கட்டிட ஆரம்ப வேலையைத் துவக்கி வைக்கும் வைபவத்தில் தலைமை தாங்கி உரையாற்றிய கல்முனைப் பிரதேச செயலாளரும், கல்முனை நகர விஷேட ஆணையாளருமான ஏ.எல்.எம்.பளீல் அவர்கள் தனதுரையின் போது கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது:- ஒரு கட்டிட நிர்மாணத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு செய்தால் மட்டும் போதாது. அதனை உரிய முறையில் பெற்றுப் பயன்படுத்திக் கொள்வதிலேயே அந்த நிதி ஒதுக்கீட்டின் வெற்றி தங்கியிருக்கின்றது. இங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த நூலகத்தின் புதிய கட்டிட நிர்மாணத்திற்காக பாராளுமன்ற உறுப்பினர் யூ.சி.எம்.ஹனிபா (மருதூர் கனி) அவர்கள் இருபது இலட்சம் நிதியை ஒதுக்கீடு செய்திருக்கின்றார். அத்தோடு அமைச்சர் பேரியல் அஷ்ர.்ப் முப்பது இலட்சத்தினை தனது அமைச்சு மூலமாக ஒதுக்கீடு செய்திருக்கின்றார். மொத்தமாக ஐம்பது இலட்ச ரூபாவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் இந்நூலகத்தினை கூடிய விரைவில் கட்டிமுடிக்க இங்கே வருகை தந்திருக்கும் ஊர்ப் பிரமுகர்களும், மற்றும் அதிகாரிகளும் கூடிய 'கவனம் செலுத்த வேண்டும்.

மேற்படி பொது நூலகத் திற்காக அடிக்கல்லினை பாராளுமன்ற உறுப்பினர் மருதூர்க்கனி அவர்களின் வேண்டுதலுக்கிணங்கி, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியும், அமைச்சருமான பேரியல் அஷ்ர.்ப் கடந்த மாதம் நாட்டியது அறிந்ததே.

# அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு வளப் பங்கீட்டில் பாரபட்சம்!

(காரைதீவு நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு வளங்கள் வழங்குவதில் கல்முனைப் பிராந்தியப் பிரதி மகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் அதிக பாரபட்சம் காட்டுவதால் ஆஸ்பத்திரி மூடப்படும் அபாயமுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கவிற்கு சம்மாந்துறைத் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழுச் செயலாளர் எம்.ஐ. ஏ.ஆர். புகாரி நீண்ட கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

''அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தின் 75 சத வீதமான மக்களுக்கு சேவையாற்றும் மேற்படி வைத்தியசாலை திட்டமிட்டு புறக்கணிக்கப்படும் செயலை வன்மையாகக் கண்டிப்பதாக" குறிப்பிட்டு எழுதியிருக்கும் அக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

''அம்பாறைப் பிரதேசத்திலிருந்து 2000 மே மாதம் கல்முனை தனி சுகாதார அலகைப் பெற்றது. அன்றிலிருந்து இன்றுவரை பதில் பணிப்பாளராக ஒரு வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை சுகாதாரப் பிரிவில் கல்முனை, கல்முனை தெற்கு, அக்கரைப்பற்று என மூன்று வைத்தியசாலைகள் உள்ளன. இவை சராசரியாக நாளொன்றுக்கு 300 பேரை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக சந்திக்கின்றன. ஆனால் இம்மூன்றுக்கிடையிலான வளப்பங்கீடு பாரிய ஏற்றத்தாழ்வுடன் இடம் பெற்றுள்ளது" இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஒரு நிபுணர் கூட இல்லை. ஆக 9 வைத்திய அதிகாரிகளே உள்ளனர். 14 தாதிகள், 19 தொழிலாளர்கள் உள்ளனர். சத்திரசிகிச்சை கூடம் இல்லை.

கல்முனை பிராந்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அக்கரைப்பற்று வைத்தியசாலையை எறெடுத்தும் பார்ப்பதில்லை. இதனால் பல பிரச்சினைகளை இவ் வைத்தியசாலை எதிர்நோக்குகிறது.

மாற்றீடின்றி வைத்திய அதிகாரிகள் தொலைபேசியில் தற்காலிக இடமாற்றத்தில் செல்லுமாறு பணிக்கப்படுகின்றனர். மாவட்ட வைத்திய அதிகாரியின் சம்மதம் ஏதும் பெறப்படாமல் தன்னிச்சையாக பணிக்கப்படும். இச் செயலுக்கு எதிராக நடவடிக்கைதேவை.

எனவே மக்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு எதிரான உணர்ச்சியை எதிர்ப்பலைகள் தூண்டிவிட இப் பணிப்பாளர் காரணமாயுள்ளார். உடனடியாக தகுதியான நிரந்தரமான பணிப்பாளரை நியமனஞ் செய்ய ஏற்பாடு செய்யுங்கள்" என்று குறிப்பிட்டுள்ளது.

# மார்க்ஸீயம் நூல் வெளியீடு

(நமது நிருபர்)

வரலாற்று ஆசிரியர் டைலர் ஆங்கிலத்தில் எழுதிய மார்க்சீயம், வரலாறு, கோட்பாடு, கண்ணோட்டம் என்ற மொழிபெயர்ப்பு நூலின் வெளியீட்டு விழா 7-10-2001 ஆம் திகதி முற்பகல் 9.45 அளவில் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நூலினை மணி - வேலுப்பிள்ளை (கனடா) மொழி பெயர்த்துள்ளார். தொகுப்பாசிரியராகக் கடமையாற்றிய திக்கவயல் சி.தர்மகுலசிங்கம் இத்தினத்தில் வெளியிடவுள்ளார்.

இந்நூல் வெளயீட்டுக்கு வரலாற்று ஆய்வாளர் பூ.ம.செல்லத்துரை தலைமை தாங்குகின்றார். நூலினைக் கலாநிதி செ.யோகராஜா மெய்யியல் விரிவுரையாளர் எஸ்.வாசுகி, 'அன்புமணி' நாகலிங்கம், சுபா சக்கரவர்த்தி ஆகியோர் விமர்சிக்கிறார்கள்.

இந்நூலினைப் பற்றிய கருத்துக்களைக் கூறப் போதிய நேரம் பார்வையாளர்கட்கு ஒதுக்கப்படும் அனுசரணை வழங்கும் மட்டக்களப்புத் திருமறைக் கலாமன்றம் அறிவித்து உள்ளது.

இந்நூலின் முதல் பிரதியை மட்டக்களப்பு உதவிச் சமுர்த்தி ஆணையாளர் ஆர்.நெடுஞ்செழியன் பெற்றுக்கொள்வார்.

# பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இங்கிலாந்து பயணம்

(எம்.பீ.ஏ.ஹாறூன்)

தென் கிழக்குப் பல்கலைக்கழக ஆங்கில மொழிப் பிரிவு விரிவுரையாளர்களான ஏ.எம்.எம். நவாஸ் (பிரிவுத் தலைவர்), எம்.ஏ. எம்.சமீம் ஆகியோர் இங்கிலாந்து லங்ஸ்ரார் பல்கலைக்கழகத்தால் நடத்தாப்படும் ''கல்விசார் கற்கை நெறிகளுக்கான ஆங்கிலம்" எனும் பயிற்சிநெறியில் கலந்து கொள்வதற்காக கடந்த வாரம் இங்கிலாந்து பயணமாகினர்.

இவ்விஜயமானது தென் கிழக்குப் பல்கலைக்கழக ஆங்கிலப் பிரிவிற்கும் லங்ஸ்டார் பல்கலைக்கழகத்திற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்திற்கிணங்க உபவேந்தர் எம்.எல்.ஏ.காதரின் வழிகாட்டலின் கீழும் இலங்கை பிரிட்டிஷ் கவுன்சிலின் அனுசரணையுடனும் ஏற்படுத்தப்பட்ட இணைப்புத் திட்டத்தின் கீழ் இக்கற்கை நெறி இடம் பெறுகின்றது.

இப்பயிற்சி நெறியின் போது தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலப் பாடவிதானம் சம்பந்தமான ஆலோசனைகளும், டிப்ளோமா கற்கை நெறியினை ஆரம்பிப்பதற்கான பாடவிதான ஆலோசனைகளும் பெறப்படும்.

இதேவேளை கடந்த ஆண்டு தென்கிழக்குப்பல்கலைக் கழக விரிவுரையாளர்களான ஏ.எம். எம்.நவாஸ், ஏ.ஆர்.எம்.அன்ஸார் ஆகியோர் லங்ஸ்டார் பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்ததுடன் லங்ஸ்டார் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இருவரும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

இப்பரஸ்பர இணைப்புத் திட்டத்தின் கீழ் தென கிழக்குப் பல்கலைக்கழக ஆங்கில விருத்திக்கான நடவடிக்கைகள் பல மேற் கொள்ளப்படவுள்ளன.

# இணைப்பாளர் நியமனம்

(ஐ.எல்.ஜலீல்)

ஐ.தே.கட்சியின் அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ், முஸ்லிம் பிரதேசங்களினை உள்ளடக்கிய கரையோர மாவட்டத்துக் கான இணைப்பாளராக சம்மாந்துறையைச் சேர்ந்த பத்திரிகை ஆசிரியர் எம்.ஐ.பௌஸ்தீனை ஐ.தே.க. தலைமைக் காரியாலயம் சிறிக் கொத்தாவிலிருந்து ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரசிங்கா வினால் நேற்று முன்தினம் நியனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் சம்பந்தமாக கரையோர மாவட்டத்துக் கான அங்கீகாரத்தினை ஐ.தே.கட்சி வழங்கியுள்ளதினையும், கட்சியின் புதிய அரசியல் சீர்திருத்தத்துக்க மைவாகவும், செயற்படுவதற்கு மான எடுத்துக்காட்டாக இந்திய மனம் வழங்கப்பட்டுள்ளது.

# கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(வேதாந்தி)

மட்டக்களப்பு மாநகர சபைப் பகுதியில் சட்டவிரோத வடிசாராய உற்பத்தி அதிகரித்துவருவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் சமூக சீர்கேடுகள் அதிகரித்துள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு வடி சாராய உற்பத்தியில் ஈடுபட்டோருக்கு எதிராக மட்டக்களப்பு பொலிஸார் கடும் நடவடிக்கை எடுத்திருந்தனர். இதனால் கசிப்பு உற்பத்தி குறைந்து காணப்பட்டது.

தற்போது இவ்விடயத்தில் பொலிஸார் கவனம் செலுத்தாமையால் கசிப்பு உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் 93 முறைப்பாடுகள்

(துவஷி)

கல்முனை மனித உரிமை மீறல் ஆணைக்குழுவில் இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் 93 முறைப் பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இம் முறைப்பாடுகளுள் 73 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுவிட்டதாகவும், மிகுதி 20 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்படவில்லை எனவும் கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சென்ற வருடம் மட்டும் 353 மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் அதில் 303 முறைப்பாடுகளுக்கு பூரண தீர்வு காணப்பட்டு நிறைவேற்றி வைத்துள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# தொழில் நுட்ப கல்லூரிகளில் ஆபரண தொழிநுட்ப பாடம் கற்பிக்க வேண்டும்

(களுவாஞ்சிகுடி நிருபர்)

மட்டக்களப்பு தொழில் நுட்பக்கல்லூரியில் ஆபரணத் தொழில் டிப்ளோமா பாடநெறியை ஆரம்பிக்க கல்லூரி நிருவாக உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட மனித வலு அமைப்பின் தலைவர் வடிவேல் கண்ணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதி கூடிய எண்ணிக்கையான ஆபரணத் தொழிலில் ஈடுபடுவோர் வசிப்பதால், மட்டக்களப்பு மாவட்டத்திற்கே இப்பயிற்சிநெறி பொருத்தமானது எனக் குறிப்பிட்ட அவர், தற்போது இப்பாடநெறி மருதமுனை தொழில்நுட்பக் கல்லூரியிலேயே நடைபெறுவதாகக் குறிப்பிட்டார்.

இப்பாடநெறியின் மூலம் நவீன தொழில்நுட்பத்துடன் குறைந்த நேரத்தில் கூடிய ஆபரணங்களை உற்பத்தி செய்யமுடியும் எனக்குறிப்பிட்ட அவர் இதை இப் பகுதியில் விரிவுபடுத்துவதுடன் கூடியளவு படித்து வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகள் இதன் மூலம் பயன்பெறுவர் எ

# மீள் குடியேற்றத்தால் மக்கள் அவயவம் இழப்பு நிறுத்தக் கோரி ஈ.பி.ஆர்.எல்.எப்.மறுப்பு

யாழ் தென்மராட்சிப் பாதுகாப்பு அற்ற பகுதிகளில் மக்களை மீள் குடியமர்த்த வேண்டாம் கடந்த ஆறுமாத காலத்துக்குள் இப்பகுதியில் அறுபது பேர் அவயவங்களை இழந்துள்ளதுடன் அண்மையில் கட்டைப்பிராய் பகுதியில் அமுக்க வெடியில் சிக்கி ஏழுபேர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே என கடந்த செவ்வாய் நடைபெற்ற மாநகர சபைக் கூட்டத்தில் யாழ் மேயர் ரவிராஜ் தெரிவித்தார்.

இக் குடியேற்றத்தின் விளைவாக மக்கள் தங்கள் அவயங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இக் குடியேற்றத்தினை நிறுத்தும் படி இக் கூட்டத்தில் பிரேரனை முன் வைக்கப்பட்டபோது அதற்கு ஈ.பி.ஆர்.எல். எவ்.வரதர் அணி மறுப்பு தெரிவித்தமையடுத்து பிரேரணை நிறைவேற்றப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மரங்களை வெட்டும் படையினர்

சித்தாண்டி விநாயகர் கிராமப் பகுதியில் பொது மக்களுக்கு சொந்தமான மரங்களை படையினர் காப்பரண் அமைப்பதற்காக வெட்டிச் செல்வதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான மரங்களை வெட்ட மரச் சொந்தக்காரர்களையே படையினர் பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


பயிர் நாற்றுக்கள் தேவையா...?
தக்காளி, கத்தரி, மிளகாய் நாற்றுக்கள் தேவையானோர் நாடவேண்டிய இடம்.
100-நாற்றுகள் 40ரூபாய் மட்டுமே
மன்று தொ.பே.இ:- 22500
(முற்பணம் கட்டி பதிவு செய்து கொள்ளவும்)
விவசாய வள அபிவிருத்திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட இப்பண்ணைகளில் நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
*தாளங்குடா பண்ணை - தொ.பே.இ:- 46698 *பிள்ளையாரடி பண்ணை - தொ.பே.இ:- 24091

# உண்மையே உயர்வு தரும்

ஓர் ஊரில் கோபிநாத் என்றொரு வியாபாரி இருந்தார். அவரிடம் இரண்டு வேலையாட்கள் இருந்தனர். அவர்கள் சரிவர வேலை செய்வதில்லை. எப்பொழுதும் பொய் சொல்லி ஏமாற்றி வந்தனர். சேகர் என்பவர் கோபிநாத்தின் நண்பர். ஒருநாள் கோபிநாத் வீட்டிற்கு சேகர் வந்திருந்தார். இருவரும் வெகுநேரம் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது சேகரிடம் கோபிநாத் ''என்னிடம் உள்ள வேலையாட்கள் சரிவர வேலை செய்வதில்லை. தாங்கள் எனக்கு உண்மையான வேலையாட்கள் கிடைக்க உதவ முடியுமா?'' என்று கேட்டார். சேகரும், கோபிநாத்திற்கு உண்மையுள்ள வேலையாட்கள் கிடைக்க முயற்சிப்பதாகக் கூறி புறப்பட்டுச் சென்றார். சில நாட்கள் கழிந்தது.



ஒரு நாட்காலை சேகர் அடுத்த கிராமத்துக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். வழியில் இரு கிராமவாசிகள் செல்வதைப் பார்த்தார். அவர்களிடம் சென்று ''நீங்கள் எங்கு வசிப்பவர்கள்? எங்கு செல்கிறீர்கள்?'' என்று விசாரித்தார். அவர்களில் ஒருவன் ''நாங்கள் இருவரும் அருகிலுள்ள கிராமத்தில் வசிக்கும் ஏழைக்குடியானவர்கள். என் பெயர் பழனி; இவன் பெயர் வேணு; இருவரும் வேலைதேடி அருகிலுள்ள நகரத்திற்கு செல்கிறோம்'' என்றான். சேகர் அவர்களிடம் ''நீங்கள் இருவரும் என்னுடன் வாருங்கள். நான் உங்களுக்கு வேலை கொடுக்கிறேன் என்று கூறி அவர்களை கோபிநாத் வீட்டிற்கு அழைத்துச் சென்று இருவரையும் வெளியில் நிறுத்திவிட்டு உள்ளே சென்று கோபிநாத்தைப் பார்த்து பேசினார். பின்னர் தான் அழைத்து வந்த வேலையாட்கள் நேர்மையானவர்களா என்று பரிசோதிப்பதற்கு கோபிநாத்திடம் இருந்து ஒரு வைர மோதிரத்தை வாங்கி பின்புறம் இருக்கும் கிணற்றடிக்குச் சென்று அம் மோதிரத்தை கிணற்றினுள் எறிந்தார். பிறகு வெளியில் வந்து இருவரையும் கூட்டிச்சென்றார். அவர்களிடம் இரண்டு பெரிய ஓலைக் கூடைகளைக் கொடுத்தார். ''கிணற்றிலிருந்து வாளியால் நீரை இறைத்து, இக்கூடைகளை நிரப்புங்கள். இதுதான் உங்கள் வேலை. வேலை முடிந்ததும் தகுந்த ஊதியம் கிடைக்கும் என்று அவர்களிடம் கூறினார். பிறகு உள்ளே சென்றார். பழனியும், வேணுவும் நீரை இறைத்து கூடைகளில் ஊற்றினர். வெகுநேரம் வேலை செய்தும் கூடைகள் பிரம்பினால் ஆக்கப்பட்டது என்பதால் நிரம்பவில்லை. கூடைகளில் அடியில் இருந்த துவாரங்கள் வளியே நீர் வெளியேறியது. நடுப்பகல் ஆனது வேணு பழனியிடம் ''இக்கூடைகளை நிரப்புவதென்பது முடியாத செயல். என்னால் இனி வேலை செய்ய முடியாது. நான் போகிறேன் என்று கூறி அவ்விடம் விட்டு வெளியேறினான் வேணு. ஆனால் பழனி அயராமல் தண்ணீர் இழுத்துக் கூடையில் விட்டுவந்தான். வெகுநேரம் வேலை செய்தபின் கிணற்றில் நீர் வற்றியது அதன் அடியில் கிடந்த மோதிரம் பளிச்சென்று தெரிந்தது. அதைக் கண்ட பழனி அதை வெளியே எடுத்துப் பார்த்தான். விலையுயர்ந்த பொன் மோதிரம் என்று தோன்றியது. அதை நேரே, உள்ளே சென்று சேகரிடம் கொடுத்து கிடைத்த விபரம் கூறினான். மோதிரத்தைக் கையில் வாங்கிய சேகர் அதை கோபிநாத்திடம் கொடுத்தார். உடனே கோபிநாத்திடம் ''இதோ! உனக்கு உண்மையான வேலையாள் ஒருவன் கிடைத்துவிட்டான் என்று கூறினான். அன்றுமுதல் பழனி கோபிநாத்திடம் வேலைக்கு அமர்ந்தான். உண்மையாக உழைத்து வெகுகாலம் அவரிடம் வேலை செய்தான். கோபிநாத்தும் அவனுக்கு தகுந்த சம்பளம் கொடுத்தார்.

**தே.மதன்ராஜ்,**
**தரம்-8B,**
**மட்டு.மெ.ம.கல்லூரி.**




## சுருக்கக் குறியீடுகளும் அதன் விளக்கங்களும்

1. **A.D.B**- Asian Development Bank:- ஆசியஅபிவிருத்தி வங்கி
2. **B.B.C**- British Broadcasting Corporation:- பிரித்தானிய ஒலிபரப்பு நிறுவனம்.
3. **C.I.A**- Central Intelligence Agency:- மத்திய உளவு தாபனம்.
4. **E.E.C**- Europeon Economic Community:- ஐரோப்பிய பொருளாதார சமூகம்.
5. **I.L.O**- International Labour Organistion:- சர்வதேச தொழிலாளர் நிறுவனம்.
6. **I.T.O**- International Trade Organistion:- சர்வதேச வர்த்தக நிறுவனம்.
7. **N.A.T.O** - North Atlantic Treaty Organisation:- வட அத்திலாந்திக் ஒப்பந்தத் தாபனம்.
8. **O.P.E.C**- Organisation of petroleum Exporting Countries. பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் நிறுவனம்
9. **W.H.O**- World Health Organisation:- உலக சுகாதார நிறுவனம்.
10. **P.H.N-** Public Health Nurse:- பொதுச் சுகாதாரச் தாதி.
11. **C.T.B**- Ceylon Transport Board:- இலங்கை போக்குவரத்துசபை.
12 **C.E.B**- Ceylon Electricity Board:- இலங்கை மின்சார சபை.
13. **Y.M.H.A**- Young Men Hindu Association:- இளைஞர் இந்து சங்கம்.
14. **C.W.E.**- Cooperative Wholesale Establishment:- கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்.
15. **UNESCO**- United Nations Educational Scientific and Cultural Organisation:- ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாசாரநிறுவனம்

**சு.தர்ஷினி**
**தரம்- 11**
**மட் வின்சன்ட் ம.தே.பா**

## அறிந்து கொள்ளுங்கள்

1. சந்திரனில் முதலில் காலடி வைத்தவர்?
   *நீல் ஆம்ஸ்ரோங்.*
2. விண்வெளிக்கு முதலில் சென்றவர்?
   *யூரிக்காகரின்.*
3. முதன் முதலில் விண்வெளிக்குச் சென்ற பெண்மணி?
   *வாலன்டினா தெரஸ்கோவா*
4. ஐக்கிய நாடுகள் சபையின் முதல் பெண் தலைவி?
   *திருமதி விஜயலட்சுமி.*
5. முதன் முதல் நோபல் பரிசு பெற்ற இந்தியர்?
   *ரவீந்திரநாத் தாகூர்*
6. இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி?
   *திரு.டி.எஸ் சேனநாயக்க*
7. உலகின் கூரை எனப்படுவது?
   *பமீர் பீடபூமி.*
8. பொன்வாயில் நகரம் எனப்படுவது?
   *சான் பிரான்சிஸ்கோ.*
9. இருண்ட கண்டம் எனப்படுவது?
   *ஆபிரிக்கா.*
10. உலகத்தை முதல் முதல் சுற்றி வந்தவர்?
   *மகலன்.*

**ச.ஜெயப்பிரியா**
**தரம்-12**
**மட்/தேத்தாதீவு ம.வி**

## சார்க் அமைப்பு

தெற்காசிய நாடுகள் ஒன்று சேர்ந்து உருவான அமைப்பே சார்க் அமைப்பு எனலாம். அதாவது தெற்காசிய பிராந்திய அமைப்பு ஒத்துழைப்பு மையம் எனலாம். இவ் சார்க் அமைப்பானது 1985 டிசம்பர் மாதம் பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் இடம் பெற்றது. முதலாவது மகாநாட்டில் 7 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இவர்கள்தான் சார்க் அமைப்பின் குறிக்கோள்களை உருவாக்கினர்.

1987ம் ஆண்டு காட்மண்டில் 1965 இஸ்லாமாபாத்திலும் கூடப்பட்ட மகாநாடுகளில் சூழலை விருத்திசெய்யும் கூட்டுறவு மனிதவள அபிவிருத்திக்கான நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது.

சார்க் அமைப்பின் மூலம் 1992சூழல் ஆண்டாகவும் 1993ல் வலதுகுறைந்தோர் ஆண்டாகவும் கருதப்பட்டது.

**கு- ரமணன்**
**8B**
**மட் புனித மிக்கேல் கல்லூரி**

## உலகின் மிகப்பெரியவை

| | | |
|---|---|---|
| கண்டம் | :- | ஆசியா |
| தீவு | :- | கிறீன்லாந்து |
| தேவாலயம் | :- | சென் பீற்றஸ் |
| நூலகம் | :- | லெனின் தேசிய நூலகம் |
| பெரிய நதி | :- | அமேசன் நதி |
| நீளமான நதி | :- | மிசூறிமிசுசிப்பி |
| பெரிய மணிக்கூடு | :- | கால்கேம் |

செ.வினோதினி,
தரம்:- 9V
மட்/ரு.விவேகானந்த
ம.ம.வித்தி.

## தெரிந்து கொள்ளுங்கள்

1. கௌரவிக்கப்பட வேண்டியவை:- முதுமை, சட்டம்
2. கட்டுப்படுத்த வேண்டியவை:- நாக்கு, உணர்ச்சி, ஆவேசம்
3. கவனமாயிருக்க வேண்டியவை:- பேச்சு, நடவடிக்கை, செயல்
4. பயன் படுத்த வேண்டியவை:- வீரம், உற்சாகம், போதுமென்றமனம்
5. பாதுகாக்கப்பட வேண்டியவை:- வாக்குறுதி, நட்பு, அன்பு
6. தடுக்கப்பட வேண்டியவை- சோம்பல், பொறாமை, குற்றம், புரிதல்
7. தவிர்க்கப்பட வேண்டியவை:- புகை, மது, சூதாட்டம்
8. விரும்பப்பட வேண்டியவை:- தூய்மை, கடின உழைப்பு, நாணயம்.

**தருமலிங்கம் ஜெகதீசன் வன்னியார் வீதி**
**களுதாவளை 01**



**ப.தயாநிதி,**
**மட்.புனித மிக்கேல் கல்லூரி.**

## அன்னாசி

அமெரிக்க வெப்ப வலயப் பழம் அன்னாசி ஆகும். அன்னாசி பேரு நாட்டில் நானாஸ் எனப்பட்டது. தென்னமெரிக்காவிற்குச்சென்ற ஸ்பெயின் நாட்டவர் அன்னாசியை ஐரோப்பாவிற்கு முதன்முதல் கொண்டு வந்தனர். அன்னாசிப்பழத்தில் சுமார் 90 வகைகளுள்ளன. ஒரு தடவை செய்கை பண்ணிய அன்னாசித் தோட்டத்திலிருந்து எட்டுமுதல் பத்து ஆண்டு வரை பயன் பெறமுடியும்.

**எஸ்.ரமணன்**
**ஆண்டு 8**
**மட் மெதடிஸ்த மத்திய கல்லூரி.**

## நிறம் தீட்டுங்கள்



இங்குள்ள படத்திற்கு சிறந்த முறையில் வர்ணம் தீட்டுங்கள் பார்ப்போம். சிறப்பாக வர்ணம் தீட்டுபவருக்கு 25ரூபா பரிசு காத்திருக்கிறது.

கடந்த வாரம் நிறந்தீட்டுங்கள் பகுதிக்கு சிறந்த முறையில் நிறம் தீட்டிப் பரிசு பெறுபவர்:- **எஸ்.துஷாந், மட்டு.புனித மிக்கேல் கல்லூரி.**

### பாராட்டுக்குரியவர்கள்

**1. ஸ்ரீ.ஜொய்தன்,**
**10, தாமரைக்கேணி,**
**மட்டக்களப்பு.**
**2. தே.மதன்ராஜ்,**
**இல 22, 2ம் குறுக்கு,**
**மாமாங்கம்,**
**மட்டக்களப்பு.**
**3. ஜே.யனுஷா,**
**11/12, ஏரன்ஸ் லேன்,**
**தாண்டவன்வெளி.**
**4. ச.ரமணன்,**
**கல்லடி.**
**5. எம்.வினோஜினி,**
**பூங்குன்றம்,**
**ஆரையம்பதி - 01.**

**அனுப்பவேண்டிய முகவரி:**
**நிறந்தீட்டுங்கள் - 09**
**இளஞ்சிட்டுக்கள்,**
**தினக்கதிர்,**
**த.பெ.எண்:- 06**
**மட்டக்களப்பு.**




# கடின பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி

(மதி)

மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை நடாத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட நொக்கவுட் முறையிலான கடின பந்து கிரிக்கட் போட்டி மட்டு. சிவானந்தா விளையாட்டரங்கில் நடைபெறுகிறது. இதில் (27-09-01) இல் முதலாவது அரையிறுதிப் போட்டி மட்டக்களப்பு லக்கி அணிக்கும் ஏறாவூர் வை.எஸ்.எஸ் .சி அணிக்குமிடையே நடைபெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வை.எஸ்.எஸ்.சி அணி அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் அன்சார் 30 ஓட்டங்களை பெற்றார். லக்கி அணியின் பந்து வீச்சில் பிரசாத் 18 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய லக்கி அணி 27 ஓவர்களில் 7 விக்கட்டுக்களை இழந்து வெற்றி பெற்றது. லக்கி அணி சார்பாக மேனன் 23, பிரதீபன் ஆட்டமிழக்காது 20, சுதன் 10 ஓட்டங்களை பெற்றனர்.

வை.எஸ்.எஸ்.சி. அணியின் பந்து வீச்சில் ஆரம்ப பந்து வீச்சாளர் ரமீஸ் 3 விக்கட்டுக்களை கைப்பற்றினர்.

இப்போட்டி மூலம் லக்கி அணி இறுதி போட்டிக்கு தெரிவாகியுள்ளது. சிவானந்தா அணி அல்லது கோட்டைமுனை அணி இறுதிப்போட்டியில் லக்கி அணியுடன் விளையாடும்.

இப்போட்டியின் நடுவர்களாக லேசர் விளையாட்டுக்கழக உறுப்பினர்களான சுமன் அவர்களும், ஜெயச்சந்திரன் அவர்களும் கடமையாற்றினர்.

## ஒலிம்பிக் நினைவுகள் – 28.....................

# தொலைக்காட்சியில் என் மனைவி என்னை பார்க்க வேண்டும் என்பதற்காக ஓடினேன்

(எம்.ஐ.எம்.முஸ்தபா)

19வது ஒலிம்பிக் போட்டி 1968ம் ஆண்டு மெக்சிகோவில் நடைபெற்றது. இந்த ஒலிம்பிக்கில் அமெரிக்கா 106 பதக்கங்களைப் பெற்றுக்கொண்டது. மெக்ஸிகோ ஒலிம்பிக்கில் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைக்கும் பொறுப்பு மெக்ஸிகோ பெண் ஒருத்திக்குக் கிடைத்தது. இவரின் பெயர் பகிலோ என்பதாகும்.

இவர் ஒலிம்பிக் தீபத்துடன் 90 படிகளில் ஏறி தீபத்தை ஏற்றி வைத்தார். இந்த ஒலிம்பிக் பற்றி ஒரு விவரணத் திரைப்படமொன்று உருவாக்கப்பட்டது. 140 படப்பிடிப்பாளர்கள் இதில் ஈடுபட்டு திரைப்படத்தை வெளியிட்டனர். ஹொக்கிப் போட்டியில் இந்தியா மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இந்தியா முதன்முறையாக ஒலிம்பிக் இறுதிப்போட்டியில் ஆடும் தகுதியை இழந்தமை இந்த ஒலிம்பிக்கில்தான். ஹொக்கியில் முதலாம் இடத்தை பாகிஸ்தானும், இரண்டாமிடத்தை அவுஸ்திரேலியாவும் பெற்றுக்கொண்டன. நீளம் பாய்தலில் அமெரிக்க வீரரான பொப்பீமன் 29 அடிக்குமேல் பாய்ந்து சாதனை ஏற்படுத்தினார். உலகில் இத்தூரத்தைப் பாய்ந்த முதலாவது வீரர் இவராவார்.

மெக்ஸிகோ ஒலிம்பிக்கில் உயரம் பாய்தலில் வெற்றியீட்டியவர் டிக்பொஸ்பரி ஆகும். இவரே பொஸ்பரி உயரம் பாய்தல் முறையை அறிமுகப்படுத்தியவர். இன்று உலகில் இந்த முறையிலேயே அதிகமானோர் உயரம் பாய்கின்றனர். மொஸ்கோ ஒலிம்பிக்கில் உயரம் பாய்தல் இறுதிச்சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்ட 16 பேரில் 13 பேர் பொஸ் பரிமுறையிலேயே உயரம் பாய்ந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த முறை மூலம் பொஸ்பரி 7 அடி 4 அங்குலம் உயரம் பாய்ந்து தங்கம் வென்றார். கோல் ஊன்றிப் பாய்தலில் அமெரிக்க வீரரே வெற்றி பெற்றார். 1896 - 1968 வரை இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்க வீரர்களே கோல் ஊன்றிப் பாய்தல் நிகழ்ச்சியில் வெற்றி பெற்றுள்ளனர். இந்த ஒலிம்பிக்கில் அமெரிக்கா கூடுதலான பதக்கங்களைப் பெற்றுக் கொண்டது. 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் கலந்து கொண்ட இங்கிலாந்து வீரர் ரொன்ஹீல் ஆரம்பத்தில் மிகவும் வேகமாக ஓடி முன்னணியில் வந்து கொண்டிருந்தார். இவர் உலக சாதனையை ஏற்படுத்தலாம் என பலரும் நினைத்தனர். ஆனால் இவர் 7வது இடத்தைத்தான் பெற முடிந்தது. போட்டி முடிந்ததும் பத்திரிகையாளர்கள் இவரைச் சந்தித்து போட்டி ஆரம்பத்தில் ஏன் விரைவாக ஓடி முன்னுக்கு வந்தீர்கள் என வினவினர். இதற்கு அவர் இந்த நிகழ்ச்சியை எனது மனைவி தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருப்பார். அவர் என்னை தெளிவாக பார்க்க வேண்டும் என்பதற்காவே இவ்வாறு ஓடினேன் என சிரித்துக் கொண்டு கூறினார்.

400 மீ பெண்களுக்கான போட்டியில் வெற்றி பெற்றவர் பிரான்சைச் சேர்ந்த கொலட் பீசன். இவர் நாடு திரும்பியதும் அவரின் பிரதேச மேயர் 400 வைன் போத்தல்களை அன்பளிப்பு செய்து வரவேற்றார். அப்போது பீசன் ''நான் மரதன் ஓட்ட வீராங்கனையாக இருந்திருந்தால் இன்னும் அதிகமான போத்தல்கள் கிடைத்திருக்கும் என நகைச்சுவையாக கூறினார். மெக்சிக்கோ போட்டியில் இலங்கை சார்பில் மூன்று பேர் மட்டுமே கலந்து கொண்டனர். சுவட்டு மைதான நிகழ்ச்சியில் விம்லசேன பெரேரா, குத்துச் சண்டை நிகழ்ச்சியில் எச். கே.கருணானந்த, படகோட்டப் போட்டியில் ரே.விஜயவர்த்தனா ஆகியோர் கலந்து கொண்டனர். முகாமையாளராக ஏ.டப்ளியூ முசாபா சென்றிருந்தார்.

# பூரண பயிற்சி தான் சிறந்த வீரரை உருவாக்கும்

(களுவாஞ்சிகுடி நிருபர்)

மண்முனை தென் எருவிற்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் விளையாட்டுத்துறையில் ஆர்வமுள்ள சிலர் பயிற்சி பெறுவது மிகக் குறைவாகக் காணப்படுவதாக விளையாட்டு உத்தியோகத்தர் வே.ஈஸ்வரன் தெரிவித்தார். விளையாட்டுத்துறையில் பூரண பயிற்சியை நாள் தோறும் பெறுவதனால் மட்டும் தான் புகழ் பெற்ற விளையாட்டு வீரனாக அல்லது வீராங்கனையாக மாற முடியும் எனக்கு றிப்பிட்ட அவர், இவற்றுக்கு அந்தப் பகுதி விளையாட்டுக் கழகங்கள் உதவியையும், ஒத்தாசையையும் நல்க வேண்டும். தனது பிரிவில் பதிவு செய்யப்பட்ட பல விளையாட்டுக்கழகங்களில் சில விளையாட்டுக்கழகங்கள் மட்டுமே பூரணமாக இயங்குகின்றன என்றும் தெரிவித்தார்.

# தென்னாபிரிக்க அணி வெற்றி

(மதி)

சிம்பாப்வே ஹராரேயில் நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 148 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இப்போட்டியின் போது சிம்பாப்வே அணித்தலைவர் ஹீத் ஸ்ரீக் இறுதி நேரத்தில் விலகிக் கொண்டமையால் தலைவராக கைவிட்டல். கடமையாற்றினார். ஹீத் ஸ்ரீக்குக்கு பதிலாக ப்ரைஸ் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்க அணி 50 ஓவரில் 7 விக்கட் இழப்பிற்கு 272 ஓட்டங்களை பெற்றது.

ஸ்கோர் விபரம்

272/ 07

| | |
|---|---|
| கேர்ஸ்டன் | - 10 |
| கிப்ஸ் | - 69 |
| கலிஸ் | - 26 |
| குளூஸ்னர் | - 34 |
| ஜொண்டி ரூட்ஸ் | - 56 |
| மக்கென்சி | - 40 |
| பௌச்சர் | - 04 |
| பொல்லக் | - 15 |

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 40.1 ஓவரில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 124 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. இதில் ஸ்டுவார்ட் கார்லே 31 ஓட்டங்களை பெற்றார்.

தென்னாபிரிக்க பந்து வீச்சில் ஹென்டர்சன் 17/3 விக் கட்டுக்களை வீழ்த்தினார்.

ஆட்டநாயகனாக ஜொன்டி ரூட்ஸ் தெரிவானார்.

## வாசகர் நெஞ்சம்

# தொண்டர் ஆசிரியர்களுக்கு சேவை மூப்பு கருதாது நியமனம் வழங்க வேண்டுகோள்

அண்மையில் நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட தொண்டர் ஆசிரிய சங்க பொதுக்கூட்டம் வீரத்திடல் அல்கிதாயா பாடசாலையில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் இப்பிரதேசத்தில் கடமையாற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் சமுகமளித்தனர். இக் கூட்டத்தில் சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக இப்பிரதேசத்திற்கான தொண்டர் ஆசிரியர் சங்க செயலாளர் வேலாயுதன் - வேந்தன் தெரிவித்தார். மேலும் தங்களுக்கு இழைக்கப்படப் போகும் அநீதிகள் பற்றி ஜனாதிபதிக்கும், கல்வி உயர்கல்வி அமைச்சருக்கும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் மேலும் பல சம்பந்தப்பட்ட கல்வி உயர்கல்வி அதிகாரிகளுக்கும் பக்ஸ் மூலமும், பதிவுத்தபாலிலும் செய்திகளை மீண்டும் அனுப்பி வைத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றும் 123 தொண்டர் ஆசிரியர்களும் எந்தவித கொடுப்பனவு இன்றியும், தங்கள் வாழ்நாள் முழுவதையும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கே அர்ப்பணம் செய்து வருவதைப் பலரும் நன்கறிவர்.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சேவை மூப்பு கருதி நியமனம் வழங்கத் தீர்மானித்திருப்பதாக உத்தியோக பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. 1998க்கு முதல் சேவையாற்றியவர்களுக்கே நியமனம் வழங்கப்படும் எனவும், 1999க்கு பின்னர் சேவையாற்றியவர்களுக்கு நியமனம் வழங்கப்படாது எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். இது ஓர் அநீதியான செயல் எனவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதன் படி நியமனம் வழங்கினாலும் எமது சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற 123 தொண்டர் ஆசிரியர்களும் இதனை ஆட்சேபித்து அனைவருக்கும் நியமனம் வழங்க வேண்டும் எனவும் அண்மையில் நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அதிகாரிகள் எமது கோரிக்கைகளை கவனிக்காது விட்டால் எமது சங்கம் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை மிக விரைவில் நடாத்தவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் யாழ் மாவட்டத்தில் கூட 1999ம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குப்பின் சேவையாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் அண்மையில் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் ஏன் இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை. இது ஓர் அநீதியான செயல் எனவும் தொண்டர் ஆசிரியர் சங்கம் கடும் விசனம் தெரிவித்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது. நாங்கள் அனைவரும் இப்பகுதிகளில் எவ்வித கொடுப்பனவுமின்றி சேவையாற்றி வருகின்றோம். இந்நிலையில் எங்களில் பெரும்பாலானோரை புறக்கணித்து விட்டு இப்பிரதேசத்தில் இருந்து க.பொ.த (உ-த) சித்தியடைந்தவர்களில் கூடுதலான புள்ளிகள் பெற்றவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருக்கும் அதே வேளையில் இவர்களில் கூடுதலானோர் பல்கலைக்கழக மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பிரதேசத்தில் பட்டம் பெற்றவர்கள் பட்டம் பெறுவதற்கு கல்வி கற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் நாங்கள் அனைவரும் பட்டம் பெறும் தகைமை இருந்த போதிலும் இப்பிரதேச மாணவர்களின் நலனுக்காகவே அயராது உழைத்து வந்தோம். இந்நிலையில் எம்மை புறக்கணித்து விட்டு இவர்களுக்கு நியமனம் வழங்குவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

எங்களின் பிரதான கோரிக்கை யாழ் மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டது போல் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமான நாவிதன் வெளிப் பிரதேசத்தில் கடமையாற்றும் 123 தொண்டர் ஆசிரியர்களுக்கும் சேவை மூப்பைக் கருதாது நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்பதேயாகும். என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

வீ.வேந்தன்,
நாவிதன் வெளி.

# வாழைச்சேனை பொது நூலகத்தின் அறிவுக்கண் திறக்குமா

வாழைச்சேனை பொது நூலகம் வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரதேச சபைக்குட்பட்ட பல கிராமங்களிலுள்ள வாசகர்களுக்காக அமைக்கப்பட்டிருந்தாலும், நூலகம் காலை 9.00 மணிக்கு திறக்கப்பட்டு மாலை 3.50 க்கு மூடப்படுகின்றது. அன்றாடப் பத்திரிகைகள் நண்பகல் 12.00 மணிக்கே போடப்படுகின்றது. காலை 9.00 மணிக்கு பெறப்படும் பத்திரிகைகள் பிரதேச சபை ஊழியர்கள் படித்து கசங்கிய நிலையில், மதிய நேரமே மேற்படி நூலகத்திற்கு வருகிறது.

ஓட்டமாவடி பொது நூலகத்தில் காலை 9.00 மணிக்கு சகல பத்திரிகைகளும் வாசகர்களுக்கு கிடைப்பதனால் அனேக தமிழ் வாசகர்கள் அங்கு செல்வதை காணக்கூடியதாகவுள்ளது. மக்களுக்கு ஓய்வு கிடைக்கும் போது தான் நூலகத்தை நாடுவது வழக்கம்.

வாழைச்சேனை நூலகம் சனி, ஞாயிறு நாட்களில் பூட்டப்படுகின்றது.

புத்தகம் கொடுக்கும் பகுதி, உத்தியோகத்தர்கள் விடுமுறையில் நின்றாலும், பத்திரிகை படிக்கும் பகுதியை சனி, ஞாயிறு போன்ற தினங்களில் திறந்து விட்டால் என்ன? என்று தமிழ் பகுதி வாசகர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். இதற்கு பிரதேச சபையும், நூலக பொறுப்பாளரும் பதில் கூறுவார்களா?

'வாழை நிலா',
வாழைச்சேனை

# பசளை, எரிபொருள்களுக்கான தடையைத் தளர்த்துமாறு ஆரம்பக் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை

(அரியம்)

விவசாயச் செய்கைக்குத் தேவையான பசளை, கிருமி நாசினி, மற்றும் எரிபொருள்களை படுவான்கரைப் பகுதிக்கு கொண்டு செல்வதற்கான அனுமதியை பாதுகாப்புப் படையினரிடமிருந்து பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலை, தாந்தாமலை, கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட விவசாயகண்டங்களுக்கான பெரும் போக ஆரம்பக்கூட்டம் நேற்று கொக்கட்டிச்சோலை ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது விவசாயிகள் இக் கோரிக்கையை விடுத்தனர்.

பட்டிப்பளை பிரதேச செயலாளார் மா.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற ட்டத்தில் கமநல சேவை ஆணையாளர் எஸ்.சாமித்தம்பி, விவசாயத்திணைக்கள உதவிப் பணிப்பாளர், நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர், பெரும்பாக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த விவசாயிகள் கடந்த காலத்தில் பசளை, எரிபொருள்களைக் கொண்டு செல்வதில் படையினர் விதிக்கும் கட்டுப்பாடு காரணமாக விவசாயச் செய்கைப் பாதிக்கப்படுகிறது.எனவே எரிபொருள், பசளை, கிருமி நாசினிகளைக் கொண்டு செல்வதற்கான அனுமதியை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் பின்வரும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டது:

தாந்தாமலை கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் மானா வாரிச் செய்கைக்கு4015 ஏக்கர் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் விதைப்பு வேலைகளை அக்டோபர் 10ம் திகதியிலிருந்து நவம்பர் 10ம் திகதிக்குள் நிறைவு செய்ய வேண்டும் எனவும், அறுவடை அடுத்த வருடம் பெப்ரவரி 15ம் திகதிக்குள் முடிவடைய வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## சாய்ந்தமருது பகுதியில் பதற்றம்.

(காரைதீவு நிருபர்)

சாய்ந்தமருது சுப்பர் சென்றர் கடை உரிமையாளர்யூ.எல், நிசார்(ஆசிரியர்)இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவுகிறது.

நிசார் சனியன்று பிற்பகலில் கடத்திச்செல்லப்பட்டார்.நேற்று சாய்ந்த மருது கடைகள் மூடப்பட்டு காணப் பட்டபோதிலும் போக்கு வரத்துக்கள் சீராகஇடம்பெற்றது.

சிலர் பயணங்களைத் தவிர்த்துக்கொண்டனர், ஒருவித அசம்பாவிதமும் இடம் பெறவில்லை.

## அம்பிளாந்துறை........

பகல் விசேட பூசை ஆராதனைகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் வழங்கல் பிரிவுப் பொறுப்பாளர் றொசான் ஆகியோரிடம் பெற்றோர்கள் ஒப்படைத்தனர்.

இதுவரை 150இளைஞர் யுவதிகள் இதுவரை இணைந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞர் பலி

(திருமலை நிருபர்)

சேருநுவர தங்கநகரில் வெள்ளிக்கிழமை இரவு ஆயுத தாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர்ஒருவர் பலியாகியுள்ளார் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

தங்கநகரைச் சேர்ந்த கனகசுந்தரம்-மோகன்(26)என்பவரே பலியானவராவார், சின்னப்பு ஜெயராசா(21 )என்பவரே காயமடைந்தவராவார்.

ஊர்காவல் படையினரேஇச்சம்பவத்தில் ஈடுபட்டதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர் அத்துடன் அச்சமடைந்தும் காணப்படுகின்றனர்.

# திருமலையில் இளைஞர் முகாம்

(காரைதீவு நிருபர்)

வடக்கு,கிழக்கு கல்வி கலாசாரவிளையாட்டுத்துறை இளைஞர் விவகாரஅமைச்சு எதிவரும் அக் டோபர்12-17 ஆம் திகதி வரைஇளைஞர் முகாம் ஒன்றை திருகோணமலையில் நடாத்தவுள்ளது.

வடக்கு,கிழக்கைச்சேர்ந்த 300 தமிழ்,முஸ்லிம்;சிங்கள இளைஞர்கள் கலந்து கொள்வர். இம்முகாமை நடாத்துவதற்கு 50லட்சரூபா ஒதுக்கப்பட்டுருப்பதாக அமைச்சின்செயலாளர் கே.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய இளைஞர்பேரவை உறுப்பினர்கள் கடந்தவாரம் திருமலை சென்று அதற்கான பூர்வாங்க ஏற்பாடு களைச்செய்து திரும்பியுள்ளனர்.

திருகோணமலை அபேர நிறுவனத்திலும், அருகிலுள்ள பாடசாலையிலும் 06நாட்கள் வதிவிடப்பயிற்சி முகாமாக இதுநடாத்தப்படவுள்ளது.

இம்முறை அம்பாறை,மட்டக்களப்பு,திருகோணமலை,வவுனியா,மன்னார் ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்த இளைஞர்,யுவதிகளே கலந்து கொள்வர்.யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு,கிளிநொச்சிமாவட்ட இளைஞர்கள் அடுத்த வருடம் சேர்த்துக் கொள்ளப்படு வரெனதெரிய வருகிறது.

300பேரை 50பேராகப்பிரித்துஅவர் களதுதாய்மொழிகளில்கலை,மருத்துவம்,வேலை வாய்ப்பு,தலைமைத்துவப் பயிற்சிபோன்ற பலபயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

## கொழும்பில் இரு சடலங்கள் மீட்பு

கொழும்பில் இரு அடையாளம் காணப்படாத சடலங்களை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்,

பஞ்சிகாவத்தை பாலத்தடியில் ஒருஆணின்சடலமும்,காமினி படமாளிகைக்கு அருகாமையில் ஒரு பெண்ணின் சடலமும் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

இதுதொடர்பாக மருதானைப் பொலிசார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

# வவுனியாவில் காவலரண் மீது கிரனேட் வீச்சு!

(வவுனியா நிருபர்)

வவுனியா - மன்னார் வீதியில் காமினி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள பொலீஸ் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிரனேட் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத் தில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்ததாகக் கூறப்படுகின்றது. சனி அதிகாலை ஒரு மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டது. காவலரண் மீது தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து பொலிஸார் தாறுமாறாகச் சுட்டதில் பொது மகன் ஒருவர் காயமடைந்ததாகவும் - அவர் தற்போது வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# யாழ் பயண பாதுகாப்பு நடைமுறைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி வழக்குத் தாக்கல்

(நமது நிருபர்)

யாழ்.குடாநாட்டுக்கு ஆள்கள் செல்லவும் பொருள்களை அனுப்பவும் பாதுகாப்பு அனுமதி பெறப்படவேண்டும் என்ற நடைமுறை விதிக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் இவ்வாரம் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்ய ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருகின்றது.

ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டத்தரணிகள் இந்த மனுவைத் தாக்கல் செய்வர் என்று அக்கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று கொழும்பில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் இவ்விடயம் குறித்து முடிவு செய்யப்பட்டதாக அறிய வருகின்றது.

இந்த வழக்கைத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொறுப்பை கட்சியின் பிரமுகர் சட்டத்தரணி டி.எம்.சுவாமிநாதனிடம் ரணில் விக்கிரமசிங்க ஒப்படைத்திருக்கின்றார். ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட சட்டத்தரணிகளான கே.என்.சொக்ஸி, திலக் மாரப்பன, டிரோன் பெர்னாண்டோ, தயா வல்லொல, எல்.ஸி.செனிவிரத்ன ஆகியோருடன் இந்த வழக்குத் தாக்கல் செய்வது குறித்து இன்று அல்லது நாளை கலந்துரையாடி சட்ட ஆயத்தங்கள் செய்யப்படும் என்று ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டுக்கும், குடாநாட்டிலிருந்தும் பொதுமக்கள் பயணம் செய்யவும், பொருள்களை அனுப்பவும் பாதுகாப்பு முன் அனுமதி பெறப்படவேண்டும் என்று கட்டாயப்படுத்துவது அடிப்படை உரிமை மீறல் என்ற ரீதியிலும் - அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாத சமயத்திலும் இத்தகைய விதிமுறைகளை நடைமுறைப்படுத்த படையினருக்கு அதிகாரம் ஏதும் கிடையாது என்ற அடிப்படையிலும் - இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## காங்கிரஸ்.........

லக்னோ வான்வெளி கட்டுப்பாட்டு பிராந்தியத்தில் பறந்து சென்றபோது மெய்ன்பூர் மாவட்டத்தில் உள்ள பரூக்காபாத் ரெயில் நிலையம் அருகே திடீரென கீழே விழுந்து நொறுங்கியது.

இந்த பயங்கர விபத்தில் மாதவராவ் சிந்தியா உள்பட விமானத்தில் இருந்த அனைவரும் பலியானார்கள். இதுபற்றி, தகவல்கள் அறிந்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். மாதவராவ் சிந்தியா உள்பட 8 பேர் உடல்கள் உடனடியாக மீட்கப்பட்டது.

விபத்தில் பலியானவர்களில் 4 பிரபல பத்திரிகையாளர்களும் அடங்குவர்.

## கிளி நொச்சி.........

இதேசமயம் கிளிநொச்சியில நீதிமன்ற வளவினுள் உள்ள கிணற்றில் 41மி.மீ.எறிகணை ஒன்றினை கண்டுபிடித்தபோதும்வெடிக்கும்நிலையில இருந்ததால் பாதுகாப்புக்கருதி வெடிக்க வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

## வன்னிப்பிரா........

சங்கரே நியமித்திருந்தார் எனவும் பத்திரிகை செய்தியில் கூறப்பட்டுள்ளது.

கடற்புலிகளின் பிரிவு, ஆள்கடல் தாக்குதல் பிரிவு விமான எதிர்ப்பு பீரங்கிப்பிரிவு மற்றும் வான்படை ஆகியவற்றை இவரே ஆரம்பித்து வைத்தார்

கேணல் சங்கர் விமானப்பொறியியலாளர் என்பதுடன் விமானி அனுமதிப்பத்திரமும் வைத்திருந்தார்.இவரது இழப்பை அடுத்து தேடுதல் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

விசேடகொமாண்டோபிரிவான சிறுத்தைப்படைப்பிரிவு மக்கள் படைப்பிரிவானஎல்லைப் படைப்பிரிவும் காட்டுப்பகுதியில முழுமையான தேடுதல்வேட்டையை ஆரம்பித்துள்ளன.

விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளை இலக்குவைத்து ஆழவேருன்றும் படைப்பிரிவை இனங்கண்டு அப்புறப்படுத்தவே சகல படைப்பிரிவும் உசார்ப்படுத்தப்பட்டு அவசரகால பிரகடனம் செய்யப்பட்டுள்ளது என ஆங்கிலப் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கின்றது.


## கணினி பக்க வடிவமைப்பாளர் தேவை

கணினி தட்டச்சு, பக்க வடிவமைப்பு செய்யக்கூடியவர்கள் உடன் தேவை

பகுதி நேர வேலையாக செய்யலாம்

வேலை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்

கணினி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

உடன் தொடர்பு கொள்ளவும்

முகாமைத்துவப் பணிப்பாளர்
தினக்கதிர்
தொ.பே.065-22554



## கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்

இலண்டன் ஐ.பி.சி.வானொலி அனுசரணையுடன் நடாத்தும்

ஊடகவியலாளர் நிமலராஜன் நினைவுக் கட்டுரைப் போட்டி

தலைப்பு

'இன்றைய சூழலில் தமிழ் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு'

| | |
|---|---|
| முதலாம் பரிசு~ | 5000 ரூபா |
| இரண்டாம் பரிசு~ | 3000 ரூபா |
| மூன்றாம் பரிசு~ | 2000 ரூபா |

போட்டி அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படும்

கட்டுரை ஆயிரம் சொற்களுக்கு மேற்படலாகாது

முடிவுத் திகதி- 10.10.2001

அனுப்ப வேண்டிய முகவரி

செயலாளர்
கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்
பூம்புகார்
மட்டக்களப்பு

விளம்பர அனுசரணை தினக்கதிர்


இப்பத்திரிகை வேல்ட். வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.